**TAJ SAMUDRAH**
*Indian, Srilankan Restaurant*
260-A, EALING ROAD, WEMBLEY, MIDDX. HA0 4QD
Specialists in Catering for Weddings & Parties
* Over 100 Seat capacity
* For Parties over 100, we provide complimentary equipment & services free of charge
* 100 String Hoopers with sothi & sambol £15.00 only
Call:
020 8795 1616
7 Days 9 a.m. to Midnight

இலவசம்
The UDHAYAN
# உதயன்

தரத்தில்
சுவையில்
சுத்தத்தில்
சேவையில்
Niru No1
Tel:+44 208 640 8228

e-mail: thelondon@udhayan.freeserve.co.uk | UN-21 | Apl. 2002 | For News & Advertising: 020 8952 5677 | Distributions : 020 8905 7775 | 16 பக்கங்கள்

மே 2

# உள்ளாட்சி மன்றத் தேர்தல்

## எலக்ரோனிக் முறையில் வாக்களிப்பு

மே 2 உள்ளாட்சி மன்றத் தேர்தல்களில் எலக்ரோனிக் வாக்களிப்பு முறை அறிமுகப்படுத்தப்பட உள்ளது. தேர்தல் அட்டையை அல்லது பெயர் முகவரிகளை வழங்குவதன் மூலம் ஒருவர் தனது வாக்கை செலுத்த முடியும். இம்முறை வாக்குச்சாவடிகள் நிலையாக பள்ளிக்கூடங்கள் தேவாலயங்களில் வைக்கப்படுவது போல மக்கள் அதிகம் பயன்படுத்தம் சுப்பர்மாக்கற்றுக்கள் மற்றும் சந்தைப்பகுதிகளிலும் வைக்கப்பட உள்ளது. இது வரை எங்கெங்கு வைப்பது என்ற முடிவை உள்ளாட்சி மன்றங்கள் இன்னமும் முடிவு செய்யவில்லை. இது பற்றி உங்கள் உள்ளாட்சி மன்றங்கள் உங்களுக்கு அறிவிக்கும் என எமக்கு தெரிவிக்கப்பட்டது.

## சர்ச்சைக்குறிய வவுச்சர் முறை நீக்கம்

மிகவும் சர்ச்சைக்குரிய பிரச்சனையாக இருந்து வந்த வவுச்சர் முறை ஏப்ரல் 8ம் திகதி முதல் நீக்கப்பட உள்ளது. தேசிய தஞ்ச ஆதரவு முகவரகம் தஞ்சம் கோருவோருக்கு வழங்கி வரும் வவுச்சர்களுக்கு பதில் பணத்தை வழங்க உள்ளது. தஞ்சம் கோருவோருக்கு வழங்கப்பட்ட வவுச்சர்களை குறிப்பிட்ட சில சுப்பர் மாக்கற்களில் மட்டுமே பயன்படுத்த கூடியதாக இருந்தது. அதனால் வெவ்வேறு உணவுப் பழக்கம் உடைய புலம்பெயர்ந்த மக்கள் தாம் விரும்பும் உணவுப் பொருட்களை கொள்வனவு செய்ய முடியாத நிலை காணப்பட்டது. மேலும் வவுச்சர்கள் பயன்படத்தப்படும் போது அதற்கான மிகுதிப் பணம் வழங்குவதும் தடுக்கப்பட்டு இருந்தது. சில நிறுவனங்களில் வவுச்சர்களுக்கு என்று தனியான பகுதி ஒதுக்கப்பட்டது. இதனால் அப்பகுதியில் நிற்பவர்கள் தஞ்சம் கோரியவர்கள் என அடையாளம் காணப்பட்டு தாக்கப்பட்ட சம்பவங்களும் இடம்பெற்றது.

அகதிகள் அமைப்புகளும், மனித உரிமை அமைப்புகளும், தொழிற் சங்கமும் மேற்கொண்ட கடுமையான போராட்டத்தின் பலனாக தொழிற்கட்சி அரசாங்கம் வவுச்சர் முறையை நீக்குவத பற்றி ஆராய சம்மதித்து நீண்ட காலத்தின் பின்னர் நடைமுறைப்படுத்த முன் வந்து உள்ளது.



Quality Floor at Competitive Price at
Hardwood & Laminate Flooring Centre
306 Honeypot Lane
Stanmore
020 8204 2333

TEMPLE
020 8905 7775

Karahi Raja
Authentic North Indian Cuisine
FREE HOME DELIVERY
BANQUETING HALL AVAILABLE
Open 7 days a week including Bank Holidays
12.00 noon to Midnight
195 EAST LANE, NORTH WEMBLEY, MIDDX. HA0 3NG
Tel: 020 8904 5553

Yogi Ji's
Vegetarian
Egg Free Cakes
FRESH CREAM, BUTTER CREAM, NOVELTY & WEDDINGS
ANY SHAPES OR SIZE
658 Kingsbury Road, NW9 9HN
Tel 020 8204 6208
DIRECT TO YOGI
07811 275522

Triangle
Cars & Couriers


348 a High Road
Wembley
Middlesex
HA9 6AZ
24 Hour Radio Control
Tel 020 8902 8888
Tel 020 8795 1414
Fax 020 8795 1313

C & S
DISCOUNT STORE
BABY AND CHILDRENS' WEAR SPECIALISTS
C&S சவுத்தோல், கிங்ஸ்பரி
Come & Save in C & S Discount Store

| | |
|---|---|
| சிறுவர் நீளக்களிசான்கள், ஷேர்ட் செட் | £ 9.99 |
| ஆண்கள் மிகசிறந்த ஷேர்ட்ஸ் | £ 5.99 |
| ஆண்களின் ஆடம்பர ஷேர்ட்ஸ் | £ 9.99 |
| மகளிர் ஆடம்பர இரவு உடை | £ 5.99 |
| மகளிர் பஞ்சாபி சூட்ஸ் | £ 15.00 |
| சிறுவர் ஆடம்பர ஷேர்ட்ஸ் 9.99 இருந்து | £ 4.99 |
| ஆண்களின் ஆடம்பர ஷேர்ட்ஸ் 9.99 இருந்து | £ 4.99 |

மேலும் எல்லோருக்கும் தேவையான தேர்மல் உடுப்புக்கள் மிகக்குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்
Fixed prices Best Prices
714-716 Kenton Road,
Kingsbury, Harrow HA3 9QX
109-111 The Broadway Southall
Middx UB1 1LN
Open Mon-Sun 10.00am 6.00pm
(Kingsbury closed on Sundays)
SALE SALE SALE
At very reasonable price Hall for Hire
Good facility near Alperton
TEL: 020 8903 6563

Pal...
Fully Finest S... South I...
Vegetarian and Non-vegetarian
Open 12.00 noon to 3.00 pm
and
6.00 pm to midnight
10% Discount on PARTY ORDERS
& EAT-IN over £50
17 Ealing Road Wembley Middlx, HA0 4AA
Tel: 020 8900-8664 / 07939 587 338
020 8900 1990

Your Dream Home
Mortgages

Trouble GETTING a MORTGAGE?
You need to TALK to US for a BETTER DEAL
Mortgages | Buy to Let
Re-mortgages | No proof of Income
Adverse Credits | CCJ'S
Right to Buy | Self Certified
Bright Homes estate agents ltd
Call Aravin for a more a detailed & personal advice
49 North RoadSouthall, Middlesex, UB1 2JL
Tel: 020 8867 9696, Fax: 020 8867 9339, info@bright-homes.co.uk
Your home is at risk if you do not keep up a mortgage or other loan secured on it

CHARTERED
PAUL & Co.
ACCOUNTANTS
Prompt & Friendly Service
Call for FREE first meeting
020 8427 7626

# உலகெங்கும் புலம் பெயர்ந்து வாழும் 13 மில்லியன் அகதிகள்

உலகம் முழுவதும் 13 மில்லியன் அகதிகள் உள்ளதாக ஐ நா வழன் அகதிகளுக்கான அமைப்பு மதிப்பிட்டு உள்ளது. இவர்களில் பெருமளவானவர்கள் 7 மில்லியனுக்கு மேலாக ஆசியா கண்டத்திலேயே உள்ளனர். உலகம் முழுவதும் இடம்பெயரும் மில்லியன் கணக்காண அகதி மக்களில் மிகச்சிறு பகுதியினரே மேற்கு நாடுகளில் தஞ்சமடைகின்றனர். அப்படி தஞ்சம் அடைபவர்களில் ஜேர்மனிக்குள்ளேயே பெரும்பாலனவர்கள் தஞ்சம் பெறுகின்றனர். ஜேர்மனி - 88000, அமெரிக்கா - 86000, பிரித்தானியா - 70000, பிரான்ஸ் - 47000, கனடா - 42000, சுவிஸ் - 21000 என அகதிகள் புகலிடம் பெற்று உள்ளார்.

இந்த வளமான நாடுகள் 13 மில்லியன் அகதிகளில் 5 வீதத்திலும் குறைவான அகதிகளுக்கே புகலிடம் வழங்குகின்றன. ஆயினும் இந்நாடுகள் தஞ்சம் கோரிவருபவர்களை கட்டுப்படுத்துவதற்கு தேவையான அத்தனை நடவடிக்கைகளையும் முடுக்கி விட்டுள்ளன. அத்துடன் ஜெனீவா உடனபடிக்கை 50 ஆண்டுகள் பழமை வாய்ந்தது என்றும் அதனை காலத்துக்கு ஏற்ப மாற்றி அமைக்க வேண்டும் என்றும் ஐரோப்பிய ஒன்றியம் கோரிவருகிறது. இந்த மேற்கு நாடுகளின் அகதிகளுக்கு எதிரான போக்குகளால் பல நூற்றுக்கணக்கான அகதிகள் கடலிலும் மேற்கு நாடுகளின் எல்லைகளிலும் வாகனங்களுக்குள் அடைபட்டும் உயிர் இழக்கின்றனர்.

மறுபக்கத்தில் பிறப்பு வீதம் வீழ்ச்சி அடைந்து வயதடைந்து செல்லும் ஐரோப்பிய சமூகத்தை தொடர்ந்தும் தக்க வைத்துக் கொள்ளவும் அவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கவும் குடிவரவாளர்கள் ஐரோப்பிய நாடுகளுக்குள் அனுமதிக்கப்படுவது தவிர்க்க முடியாதது என ஐ நா தெரிவிக்கிறது. உலகின் நான்காவது பெரும் பொருளாதாரமாக உள்ள பிரித்தானியாவின் பொருளாதாரத்தை தொடர்ந்தும் பேணுவதற்கு பிரித்தானியாவுக்கு ஆண்டுக்கு 150,000 பேர் அனுமதிக்கப்பட வேண்டிய தேவை ஏற்பட்டு உள்ளது. அதனால் கடந்த ஆண்டு முதல் பிரித்தானியா தேர்ச்சியாளர்களை வருவிப்பதற்கு இருந்த தடைகளையும் கட்டுப்பாடுகளையும் தளர்த்தி வருகிறது.

## இலண்டன் உள்ளாட்சி மன்றத் தேர்தல்களுக்கு தயாராகிறது தமிழர்களும் களத்தில் இறங்கி உள்ளனர்..?

இலண்டனில் உள்ளாட்சி மன்றத் தேர்தல்கள் மே மாதம் 2ம் திகதி நடைபெறவிருக்கிறது. சில தமிழ் அரசியல் வாதிகளும் களத்தில் இறங்கி உள்ளனர். தமிழ் மக்கள் பெருமளவில் வாழும் நியூஹாம் பகுதியில் தொழிற்கட்சி வேட்பாளர் போல் சத்தியநேசன் களத்தில் உள்ளார். இவரை விடவும் நிரஞ்சன், சின்னமணி ஆகியோரும் ஹரோ பகுதியில் சில தமிழர்களும் போட்டியிடுகின்றனர்.

வாக்குறுதி:

போல் சத்தியநேசன் பிரித்தானியாவில் தமிழர்கள் அதிகம் வாழுகின்ற இரண்டாவது பெரிய வட்டாரமான Wallend வட்டாரத்தில் போட்டியிடுகின்றார். இவர் உதயனுக்கு வழங்கிய பிரத்தியேகப் பேட்டியில் சமூக பாதுகாப்பு, தரமான வாழ்க்கை, இளைஞர் யுவதிகளுக்கு சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுப்பது தனது இலக்கு எனத் தெரிவித்தார். குறிப்பாக தமிழ்ச் சமூகத்துக்கு நீங்கள் என்ன செய்யவுள்ளீர்கள் என கேட்ட போது நியூஹாம் பல்லினச் சமூகத்தில் தமிழர்களதும் தமிழினதும் நிலை உறுதிப்படுத்த எல்லா நடவடிக்கைகளும் எடுப்பேன் என உதயன் மூலம் தமிழ் மக்களுக்கு உறுதியளித்தார். அவர் தொடர்ந்தும் குறிப்பிடுகையில் பொங்கல் விழா, தமிழர் விழா போன்ற விழாக்களை ஒழுங்கு செய்து வருகிறோம் எனவும் குறிப்பிட்டார்.

தமிழ் மக்களின் தேதைவைகள்:

இதுவரை சம்பிரதாயப் பிரமுகராக இருந்த மேயர் மே மாதத் தேர்தலில் நேரடியாக மக்களால் தெரிவு செய்யப்படவுள்ளார். சேர் ரொபின்ஸ் வேல்ஸ் நியூஹாம் மேயர் பதவிக்கு தொழிற்கட்சி சார்பில் போட்டியிடுகிறார். தமிழ் மக்கள் அதிகம் வாழுகின்ற நியூஹாம் தொகுதியில் அவர்களது கலாச்சார மற்றும் பொது ஒன்று கூடல்களை கூடுவதற்கு அல்லது கருத்தரங்குகளை ஒழுங்கு செய்யவோ அவர்களுக்கு ஒரு இடம் இல்லை. மேலும் ஆயிரக்கணக்கான தமிழர்கள் வாழும் நியூஹாமில் அவர்களுக்கு என்று ஒரு நூலகம் இல்லை. இது விடயமாக சுதந்திரமாக இயங்கி வரும் தமிழர்களின் சுயாதீன அமைப்பான தமிழர் தகவல் நடுவம் நியூஹாம் உள்ளாட்சி மன்றத்தின் கவனத்துக்கு கொண்டு வந்து உள்ளது. தமிழர்களும் ஏனைய சிறுபான்மையினரைப் போல் தொழிற்கட்சிக்கே தமது அதரவை நீண்டகாலமாக வழங்கி வருகின்றனர். அவர்களது தேவைகள் பூர்த்தியாக்கப்படும் என்ற உறுதியை தமிழர் வாக்குகளை ஏதிர்பார்ப்பவர்கள் வழங்க வேண்டும். இது நியூஹாம் மேயருக்கு போட்டியிடுபவர்களுக்கும். ஏனைய உள்ளாட்சி மன்றங்களில் போட்டியிடுபவர்களுக்கும் பொருந்தும்.

அரசியல் பலமும் பலவீனமும்:

"பல தமிழ் அரசியல் வாதிகள் இருந்த போதும் அவர்கள் தமிழர்களை பெருமளவில் பிரதிநிதித்துவப்படுத்துவதில்லை. எப்போதாவது ஒரு தடவை ஒரு கூட்டத்துக்கு வந்து விட்டு சென்றுவிடுகிறார்கள். இவர்கள் இந்நிலையை மாற்றிக் கொள்ள வேண்டும் எனத் தெரிவித்தார் போல் சத்தியநேசன். அவர் மேலும் தொடர்கையில் கவுன்சிலராக வருபவர்கள் தமது எல்லைக்குள் உள்ள மக்களுக்கு தமது கடமையை செய்யும் அதே சமயம் தமிழ் சமூகத்தின் உறுப்பினர்களாக இருப்பதால் அச்சமூகத்துக்கும் தமது கடமைகளைச் செய்ய வேண்டும் என ஏனைய தமிழ் அரசியல் வாதிகளை கேட்டுக் கொண்டார்.

தமிழ் மக்கள் உள்ளாட்சி மன்றங்களில் பங்கெடுத்துக் கொள்வதும் தேர்தலில் தமது வாக்குகளை செலுத்தவதும் மிகவும் அவசியமானது என நியூஹாமில் இயங்கும் இளைஞர்கள் அமைப்பான எக்சகாய் தற்காப்பு பயிற்சி மன்ற தலைவர் இரவீந்திரன் உதயனுக்கு தெரிவித்தார். அவர் தொடர்ந்தும் குறிப்பிடுகையில் தமிழர் ஒருவராவது உள்ளாட்சி மன்றத்துக்கு தெரிவு செய்யப்படுவது மிக அவசியம் எனக் குறிப்பிட்டார். "அண்மைக்காலங்களிலேயே பிரித்தானியாவில் குடியேறிய எங்களுக்கு உள்ள பிரச்சனைகளை விளங்கிக்கொள்ள ஒரு தமிழ் கவுன்சிலராலேயே முடியும்" என அண்மையில் தடுப்பு முகாமில் இருந்து விடுவிக்கப்பட்ட தயாபரன் தெரிவித்தார்.

தமிழர்கள் பெருமளவினர் தங்கள் வாக்குகளை வெவ்வேறு காரணங்களுக்காக பதிவு செய்வதில்லை. அப்படி பதிவு செய்தவர்களும் தேர்தல்களின் போது தமது வாக்குகளை செலுத்துவதில்லை. இந்நிலையை மாற்றி இவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் வாக்குகளை செலுத்தி தமது உரிமையை பயன்படுத்திக் கொள்ள வேண்டும். நூற்றுக்கு மேற்பட்ட வட்டாரங்களில் தமிழர்கள் முடிவுகளை நிர்ணயிக்கக் கூடிய வாக்காளர்களாக உள்ளனர். ஆகையால் இவர்கள் தங்கள் அரசியல் பலத்தை மே 2ம் திகதி நிரூபிக்க முடியும்.



வேட்பாளர் போல் சத்தியநேசன்

## இலண்டனில் தமிழ் சினிமா தயாரிப்பு பயிற்சி

மார்ச் 30 - 31 ம் திகதிகளில் சினிமா பயிற்சிப் பட்டறை கிழக்கு இலண்டன் மனோபார்க் தேவாலயத்தில் நடைபெற்றது. பயிற்சிகளை சுவிஸ் மூவி நிறுவனத்தின் உத்தியோகபூர்வ உறுப்பினரான அஜீவன் மேற்கொண்டு இருந்தார். அஜீவன் கவிக்குயில், நிழல் யுத்தம், எச்சில் போர்வை போன்ற வெற்றிப் படங்களை (குறும் படங்கள்) இயக்கித் தங்கப்பதக்கம் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

மிக நீண்ட இடைவெளிக்குப் பின் புலம்பெயர் சினிமா பற்றிய விழிப்புணர் ஏற்பட்டு உள்ளது. இச்சினிமா - பயிற்சிப் பட்டறையில் இலண்டணின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் பல படைப்பாளிகள் கலந்து கொண்டனர். ஐரோப்பாவில் முதல் தடவையாக ஒழுங்கு செய்யப்பட்ட சினிமா பற்றிய இப்பயிற்சிப் பட்டறை 101 வீதம் வெற்றிகரமாக அமைந்தது என் அதன் ஒழுங்கமைப்பாளர்கள் உதயனுக்குத் தெரிவித்தனர். புலம் பெயர்ந்த மக்களின் சினிமா பற்றிய தகவல்களை வழங்கும் உதயனுக்கு ஒழுங்கமைப்பாளர்கள் தமது நன்றியையும் தெரிவித்தனர்.

இப்பயிற்சிப் பட்டறைக்கு மண்டபத்தை ஒழுங்கு செய்து கொடுத்த நியூஹாம் கவுன்சிலர் போல் சத்தியநேசன் புலம் பெயர்ந்து வாழும் தமிழ் மக்களின் வாழ்வும் வளமும் பற்றி ஏனைய சமூகங்களும் அறிந்து கொள்வதற்கு சினிமாவே சிறந்த ஊடகம் என்று குறிப்பிட்டார். இப்படியான பயிற்சிப் பட்டறைகள் காலத்துக்கு காலம் நடாத்தப்பட்டு தமிழ் சமூகம் பிரித்தானிய பல்லின சமூகத்துடன் பரஸ்பர உறவுகளை வளர்த்துக் கொள்ள வேண்டும் என அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவித்தார்.



பயிற்சியாளர் அஜீவன் மாணவர்களுடன்


## நூல் தேட்டம்

1000 ஈழத்து தமிழ் நூல்களின் தகவல்களைக் கொண்ட நூல்தேட்டம் யூன் முதலாம் திகதி வெளியிடப்பட உள்ளது. யாழ் நூலகம் எரிக்கப்பட்ட நினைவு நாளுடன் இந்த தொகுப்பு வெளிவருகிறது. ஸரட்போர்ட் நூலகத்தில் இடம்பெறவுள்ள இந்த வெளியீட்டு விழாவில் பாரதியின் குயில்பாட்டின் தத்துவ மர்மங்கள் என்ற ஆய்வு நூல் ஒன்றும் ஆய்வு செய்யப்பட்டவுள்ளது.




FUNTASIA
The Party Shop
BALLOON PRINTING
BALLOON DECORATING
HELIUM HIRE
PARTY WARE & NOVELTIES
BRIDAL FAVOURS
SOFT TOYS
FANCY DRESS, WIGS, MASKS
JOKES & MAKE-UP
ADULT JOKES & NOVELTIES
PERSONALISED NAPKINS
AND BOOK MATCHES.
RUBBER STAMPS SERVICES
சகலவிதமான வைபவங்களுக்கும்
தேவையான அலங்கார
சோடனைகளுக்கு நாடுங்கள்
Fantasia
229 KENTON ROAD, KENTON, HARROW, MIDDLESEX HA3 0HD
Tel/Fax: 020-8907 1333 www.FuntasiaWorld.com


PARTY INVITATION
SPECIALISTS IN PARTY PRODUCTS FOR ALL OCCASIONS
WEDDING DECORATIONS; CONTEMPORAY
DIWALI OFFER
BIG DISCOUNTS ON FIREWORKS
10% DISCOUNTS WITH THIS ADVERTISEMENT
10% விலைக் கழிவுகள் உண்டு
இவ்விளம்பரத்தை கொண்டு வருவோருக்கு
FOR THE A-Z OF PARTY PRODUCTS COME TO


171/173 HIGHSTREET NORTH, EASTHAM, E6 1JB
TEL 020 8471 9777


# தமிழக கடலுக்குள் பழம்பெரும் அதிசய நகரம்

## உலகை வியக்க வைக்கும் பண்டைய தமிழர் நாகரீகம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது

உலகின் நாகரீக வரலாற்றை மீளாய்வு செய்ய வேண்டியதற்கான மாபெரும் கண்டு பிடிப்பு இந்தியாவின் கிழக்கு கரை நகரான மகாபலிபுரத்தில் மேற்பொள்ளப்பட்டு இருக்கிறது. கடலில் இருந்து 20 அடி ஆழத்தில் மனிதர்களால் கட்டப்பட்ட அழகிய நகரம் ஒன்று சிதைந்த நிலையில் காணப்படுகிறது. திராவிட நாகரீகம்



கோவலம் கடற்கரையில் எஞ்சி இருக்கும் 7வது கோவிலின் தோற்றம்

மேலோங்கி இருந்த காலகட்டத்தில் ஏற்பட்ட கடல்கோளினால் இந்த அருமையான நாகரீகம் கடலினுள் அமிழ்ந்து விட்டதாக வரலாற்றாளர் கிரஹாம் ஹனுக் தெரிவிக்கிறார்.

இந்திய-ஆங்கிலேய அராய்ச்சிக் குழுவினர் ஏப்ரல் மாத முற்பகுதியில் கிழக்குக் கரையில் மேற்கொண்ட ஆராய்ச்சியின் போதே இந்த அதிசய நகரம் கண்டுபிடிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து அடுத்த 72 மணித்தியாலங்களில் 49 தடவைகள் கடலுக்கடியில் சென்று மேலதிக விபரங்கள் படம் பிடிக்கப்பட்டு உள்ளது.

மகாபலிபுரத்தில் ஏழு ஆலயங்கள் இருந்ததாகவும் அவற்றில் ஆறு கடல் கொண்டு சென்றதாகவும் வரலாறு உண்டு. தற்போது அந்த ஆறு ஆலயங்களும் கடலில் இருப்பது கண்டுபிடிப்பில் தெரியவந்து உள்ளது. ஏழாவது ஆலயம் இன்னமும் மகாபலிபுரக் கடற்கரையில் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

தற்போது உள்ள புராதன நகரம் கிறிஸ்துவுக்கு முன் 500 ஆண்டுகளே பழமையானது. ஆனால் தற்போதைய கண்டு பிடிப்பு வராலாற்றில் பெரும் இடைவெளியை நிரப்ப உள்ளது. மகாபலிபுரத்தில் கடலுக்குள் அமிழ்ந்து போன நகரம் கிறிஸ்துவுக்கு முன் 3000 ஆண்டுகள் பழமையானதாக இருக்கலாம் என மதிப்பிடப்படுகிறது. இதன் மூலம் புராதன நாகரீகம் எகிப்தில் தான் தோண்றியது என்ற வரலாறு மாற்றப்படுகிறது. இந்த ஆராய்ச்சியை மேற்கொண்ட பிரித்தானிய ஆய்வாளர் கிரஹாம் ஹனுக் கடலினால் நாகரீகங்கள் அழிக்கப்பட்டதை மேற்கத்தைய வரலாற்றாளர்கள் ஏற்றுக் கொள்வதில்லை என்றும் இக்கண்டுபிடிப்பிற்குப் பின் அவர்கள் அது பற்றி கூடிய கவனம் எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டு உள்ளார். கடைசிப் பனிக்காலத்தில் (Ice Age) கடல்மட்டம் உயர்ந்து பல நாகரீக நகரங்கள் கடலில் அமிழ்ந்து போனது வரலாற்று உண்மை. இப்போதைய கண்டுபிடிப்பு தமிழர்களதும் தமிழகத்தினதும் பெருமைகளை வெளிக்கொண்டு வரும் என்பது உறுதி.

இறையருள் அரசி அன்னை காயத்ரி



வேதனைகள் தீர்க்க வல்லவர், குறைகளை போக்கிட வல்லவர்
இறையருள் அரசி அன்னை காயத்ரி.
உங்களின் வாழ்கையில் ஏற்படும் துன்பங்கள் மாறிடவும் தடைகள் யாவும் விலகிடவும் காணுங்கள் அன்னையின் தரிசனம், விலகாத நோய் விலகும், தீராத பினி அகலும், மாறாத வேதனைகள் யாவும் நீங்கும், உங்களின் பிரச்சனைகள் எதுவாயினும் தடைநீங்கி வழி பெற்றிட தொடர்பு கொள்ளுங்கள் **020 8952 7775**

**FREE COMPUTER COURSES***
*Subject to Registration Fee.
**Employed or Unemployed**

- *Friendly environment*
- *Expert Trainers» Quality Teaching*
- *Flexible hours*
- *Latest Technology*
- *Hands-on training*
- *Open till late*
- *Recognised Qualifications*
- *Job Opportunity*

•IT Taster •Internet •Word •Excel •Access •Web Design •Telematics •PC Maintenance •English (ESOL & SESOL) •NEBS Business/Management Training

Subsidised Courses
•A+Certs •MCP/ MCSE •CISCO - CCNA •CCNP • Oracle • Sage Accounts • Sage Payroll

You can book your courses at any of our Branches:

| Head Office:- | South Harrow Branch: | Hendon Branch: |
| --- | --- | --- |
| North London ITeC | North London ITeC | North London ITeC |
| Hitech House | 2nd Floor, Dawson House | Techno House |
| 193 The Broadway | 276 Northolt Road | 234 - 236 The Broadway |
| London NW9 7DD | South Harrow, Middx HA2 8EB | London NW9 6AG |
| Tel: 0208 202 4646 | Tel: 0208 423 8485 | Tel: 0208 457 4848 |

Approved Centre! Accredited Trainers!
*Your Success is Guaranteed in the 'Home of IT'*
Email: info@nlitec.com Website: www.nlitec.com

# திருமண மண்டபத்தில் ரவுடிகளின் அட்டகாசம்

மார்ச் 24ம் திகதி ஈஸ்ற்ஹாம் ரவுண் ஹோலில் இடம்பெற்ற திருமணத்தில் சில இளைஞர்கள் புகுந்து கைவரிசையைக் காட்டி உள்ளனர். இதுவரை தெருவிலும் பொது நிகழ்ச்சிகளிலும் இடம்பெற்ற கலகங்கள் தற்போது தனிப்பட்ட சம்பிரதாய வைபவங்களுக்கும் பரவத் தொடங்கி உள்ளது. சம்பவம் பற்றி தெரியவருவதாவது திருமண காரியங்கள் நடந்து கொண்டிருக்கையில் மண்டபத்துக்குள் புகுந்த சில இளைஞர்கள் வேறொருவரை கத்திமுனையில் மண்டபத்தில் இருந்து இழுத்துச் சென்று உள்ளனர். இழுத்துச் செல்லப்பட்டவர் மண்டபத்துக்கு வெளியே வைத்து தாக்கப்பட்டு உள்ளார்.

இம்மோதல் இரு ஊர் குழுக்கள் சம்பந்தப்பட்டது என்றும் தாக்கப்பட்டவர் மணமகனுடைய சகோதரன் என்றும் தெரியவருகிறது. தாக்கியவர்கள் மறுநாள் மணமகனை தொலைபேசியில் அழைத்து சம்பவத்துக்கு தம் வருத்தத்தை தெரிவித்து உள்ளனர்.

# பகல் கொள்ளையரின் நேரடி கைவரிசை

## உண்டியல் அனுப்ப வைத்த பணம் கொள்ளை

318 High St North, Eastham ல் உள்ள கெ எஸ் பி சுப்பர் பூட்ஸ் நிறுவனத்துக்கு மேல்மாடியில் £15,000 கொள்ளை இடம்பெற்று உள்ளது. மார்ச் நடுப்பகுதியில் ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்ற இச்சம்பவத்தில் சம்பந்தப்பட்ட இளைஞர்கள் தமிழர்கள் என நம்பப்படுகிறது. மூவர் கொண்ட குழு மாலை 8:30 மணியளவில் அங்கு வந்ததாகவும் இருவர் கீழே காவல் நிற்க ஒருவர் மேலே சென்று துப்பாக்கியை காட்டி மிரட்டி பணத்தை பறித்துச் சென்றுள்ளனர்.

செப்ரம்பர் 11ஐத் தொடர்ந்து உண்டியல் மூலம் பணம் அனுப்புபவர்கள் விசாரணைக்கு உட்பட்டு இருந்ததும் உண்டியல் சில காலம் நிறுத்தப்பட்டு இருந்ததும் யாவரும் அறிந்ததே. தற்போது இடம்பெற்ற இச்சம்பவம் பெருமளவு பணத்தை புழங்குவதில் உள்ள ஆபத்தை மேலும் உறுதிப்படுத்தி உள்ளது. கடல்கடந்தும் சொந்த நாட்டவரிடமே சூரையாடும் கூட்டங்கள், நாளைய நாளில் பெற்ற தாயையும் பிறந்த நாட்டையும் தமக்காக அடகு வைப்பவர் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை.

# பிரித்தானியாவில் 40% வருமானவரி அதிகம்

ஐரோப்பிய நாடுகளுக்குள் பிரித்தானியர்களே அதிகம் வரி செலுத்தவதாக Bradford and Bingley Building Society மேற்கொண்ட ஆய்வு தெரிவிக்கிறது. பிரித்தானியாவின் சராசரி வருமான வரி 23.8 ஆக இருந்த போதும் ஒவ்வொரு வீடும் 29 வீதம் வரி செலுத்துகிறது. மாறாக ஏனைய ஐரோப்பிய நாடுகளில் ஒரு வீட்டில் இருந்து வரியாக செலுத்தப்படும் தொகை குறைவாகவே உள்ளது. அந் நாடுகளில் வீட்டில் இருந்து செல்லும் வரி இத்தாலி 27 வீதமும் ஸ்பெயின் 23 வீதமும் பிரான்ஸ் 22 வீதமும் ஆக உள்ளது.

இதனால் அதிகம் உழைக்கும் பிரித்தானியர்கள் குறைவாகவே சேமிக்க முடிவதாக அவ்வாய்வு சுட்டிக்காட்டுகிறது. அதிக வருமான வரி (40 வீதம்) உள்ள ஜேர்னியில் ஒரு வீட்டில் இருந்து செலுத்தப்படும் வரி £70 இலும் குறைவாக உள்ளது. பிரான்சை எடுத்துக் கொண்டால் அங்கு வீட்டுக்கான வருமானம் பிரித்தானியாவைக் காட்டிலும் £6,000 வரை குறைவாக உள்ளது ஆனால் அவர்கள் தமது வருமானத்தில் 15 வீதத்தை சேமிக்கின்றனர். ஆனால் பிரித்தானியர்கள் 5 வீதத்தையே சேமிக்கக்கூடியதாக உள்ளது.

பிரித்தானியர்கள் அதிக வரி செலுத்துவதாலும் ஐரோப்பிய பெரு நிலப்பரப்பிலும் பார்க்க பிரித்தானியர்கள் கொள்வனவு செய்யும் பொருட்களுக்கு அதிக விலை செலுத்தவதாலும் அவர்கள் கடினமாக நீண்ட நேரம் உழைத்த போதும் அவர்களுக்கு மாதக் கடைசியில் கை கடிக்கிறது.

# சீரடைந்துவரும்

## மருத்துவ சேவைகள்

மிகவும் மோசமான விமர்சனத்துக்கு உள்ளாக்கப்பட்ட பிரித்தானிய மருத்துவ சேவைகள் சற்று சீரடைய ஆரம்பித்து இருப்பதாக அண்மைய அறிக்கைகள் தெரிவிக்கிறது. இதனால் பிரதமர் ரொனி பிளேயரும் அவரது சுகாதார அமைச்சர் அலன் மில்பேர்னும் சற்று சுவாசிக்க அவகாசம் கிடைத்து உள்ளது. மருத்துச சிகிச்சைக்கு காத்திருக்க வேண்டிய காலம் குறைந்து இருப்பதும் தேசிய சுகாதார அமைச்சின் நடவடிக்கைகள் தூண்டிவிடப்பட்டு உள்ளதும் அந்த அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டு உள்ளது.

உள், வெளி நோயாளர்கள் மருத்துவ சேவைகளுக்கு காத்திருக்கும் சராசரிக் காலமும் காத்திருக்கும் கூடிய காலமும் குறைந்து உள்ளது. குடும்ப மருத்துவரை சந்திப்பதற்கு காத்திரக்க வேண்டிய காலம் குறைந்து உள்ளது. மேலும் சத்திரசிகிச்சைக்கு காத்திருக்க வேண்டிய காலத்தை குறைக்க வைக்கப்பட்ட இலக்கு அடையப்பட்டு உள்ளது. இவற்றுடன் அவசர சிகிச்சைப் பிரிவுக்கு வரும் நோயாளிகள் 4 மணித்தியாலங்களுக்குள் பார்வையிடப்படுகின்றனர். பிரித்தானிய தொலைத் தொடர்பு சேவையின் பொறியியலாளர் ரி சோதிலிங்கம் தனது மனைவி விப்ஸ் குறொஸ் மருத்துவமனையின் அவசர சிகிச்சைப் பிரிவுக்கு கொண்டு செல்லப்பட்டு அரை மணி நேரத்துக்குள் பார்வையிடப்பட்டதாக தெரிவித்தார். வீட்டில் ஏற்பட்ட விபத்து காரணமாக கொண்டு செல்லப்பட்டதாகவும் மருத்துவமனையின் துரித செயற்பாடு தன்னை ஆச்சரியப்பட வைத்ததாகவும் சோதிலிங்கம் தெரிவித்தார்.

மேற்படி மருத்துவமனை அரசாங்கத்தின் சிவப்பு பட்டியலில் இடம்பெற்று இருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. இவ்வறிக்கை அரசாங்கத்தின் மற்றுமோர் ஏமாற்று வித்தை என நிழல் சுகாதார அமைச்சர் லியம் பொக்ஸ் தெரிவித்து உள்ளார்.

EDITOR: Dr T RAVIKUMAR Chief Reporter: T.JEYABALAN Advertising Manager: T. PUSHPALINGHAM FREELY Circulated throughout UK, FRANCE & GERMANY

# பேசும் - Washing Machine

இந்தியாவில் பேசும் துவைக்கும் சாதனம் அறிமுகப்படுத்தப்பட உள்ளது. தங்கள் வீட்டு சாதனத்தில் நுகர்வோர் என்ன எதிர்பார்க்கிறார்கள் என அறிய மேற்கொள்ளப்பட்ட சந்தைப்படுத்தல் ஆய்வில் நுகர்வோர் சாதனத்தை பயன்படுத்துவதற்கான படி முறையை அச்சாதனம் தங்களுக்கு வழங்க வேண்டும் எனத் தெரிவித்து உள்ளனர். அதைத் தொடர்ந்து இந்த சாதனத்தை வடிவமைக்கும் எலக்ரோலக்ஸ் நிறுவனம் ஆங்கிலத்திலும் ஹிந்தியிலும் பேசும் துவைக்கும் சாதனத்தை வடிவமைத்து உள்ளனர். இச்சாதனம் வெகுவிரைவில் சந்தைப்படுத்தப்பட உள்ளது.

90க்கு மேற்பட்ட சொற்தொடர்களை பேசக் கூடிய இச்சாதனம் சோப் பவுடரைப் போடவும், கதவை சாத்தவும், சிறிது காத்திருக்கவும் போன்ற கட்டளைகளை வழங்கக் கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டு உள்ளது.

# பிரிவினையை வளர்க்கும் மதப் பள்ளிகள் - ஆசிரியர்கள் ஒன்றியம் கருத்து

மதப்பள்ளிகளை உருவாக்கும் அரசாங்கத்தின் திட்டம் பிரித்தானிய பல்லின சமூகத்தை பிளவுபடத்தும் என ஆசிரியர்கள் விரிவுரையாளர்கள் அமைப்பு தெரிவித்து உள்ளது. சமூக உறவுகளை வளர்ப்பதற்கு மதப்பள்ளிகள் எந்த வகையிலும் உதவாது என இவ்வமைப்பின் பிறடபோர்ட் அமைப்பாளர் சைட் மத்தியூ தெரிவிக்கிறார்.மத்தியூ மேலும் தெரிவிக்கையில் பிறட்போர்ட் பகுதியில் முஸ்லீம் பள்ளிகளை அமைப்பது அம்மாணவர்களுக்கு பிரதான பாடங்களை விட்டு இஸ்லாமை கற்பிப்பதாக அமையும் என்றார். அப்பகுதி பள்ளிவாசல்களின் அமைப்பு இக்கருத்தை மறுத்திருப்பதுடன் முஸ்லீம் பள்ளிகள் மீது பரபட்சம் காட்டப்படுவதாக குற்றம்சாட்டினர்.

சீக் மனித உரிமைகள் அமைப்பு சமயப் பள்ளிகள் கூடிய கல்வித் தகமைகள் பெறக் கூடிய சூழலை வழங்குவதாக குறிப்பிட்டு உள்ளது. பிரித்தானிய அரசு கிறிஸ்தவ, யூவிஸ் மதப்பள்ளிகளைத் தவிர இஸ்லாமிய, சீக்கிய பள்ளிகளுக்கு நிதி வழங்குவது குறிப்பிடத்தக்கது.

# வெஸ்ட்மினிஸ்டர் பாராளுமன்றத்தில் வெற்றிதரும் பிள்ளையார்

லிபிரல் டெமொகிரட் கட்சித் தலைவர் நவ்நிற் டொல்லாக்கியாவின் Court-of-Arms ல் பிள்ளையார் உருவம் பதிக்கப்பட்டு உள்ளது. இந்துக்களின் இல்லங்கள் தோறும் காணப்படும் பிள்ளையார் தற்போது பிரபுக்கள் சபைக்கும் சென்று உள்ளார். குஜராத்தில் பிறந்த இந்துவான டொல்லாக்கியா 1960ல் தான் கவுன்சிலராக வந்தது முதல் பிள்ளையார் தனக்கு பல வெற்றிகளைப் பெற்றுத் தந்ததாகவும் தொடர்ந்தும் தான் வெற்றி அடைவேன் என்றும் தெரிவித்து உள்ளார். பிரதான மூன்று கட்சிகளில் ஒன்றின் தலைவராக டொல்லாக்கியா 1999ல் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. ஆசிய இனத்தவர் ஒருவர் பிரித்தானியாவின் பிரதான கட்சி ஒன்றை தலைமை தாங்குவது இதுவே முதற் தடவை என்பது குறிப்பிடத்தக்கது.

# BEND IT LIKE BECKHAM

புலம்பெயர்ந்து வாழும் நாடுகளில் ஆசியர்களின் மற்றுமோர் நகைச்சுவைச் சினிமாவான BEND IT LIKE BECKHAM ஏப்ரல் 12 முதல் திரைக்கு வந்து உள்ளது. பஜ்ஜி ஒன் த பீச், மிசுசிப்பி மசாலா போன்று புலம்பெயர் வாழ்வுடன் ஆசிய சமூகம் சேர்ந்தும் முரண்பட்டும் வாழ்வதை தொட்டுச் சென்ற விரல்விட்டு எண்ணக் கூடிய படங்களில் ஒன்றாக இது அமையும என எதிர்பார்க்கப்படுகிறது.

**SiGN FiT**
*The Company of Dynamic Ideas.*
**Specialist in Illuminated, Non-Illuminated, Menu System & Menu Photos.**
Challenge: We will beat any Price.
Best Deal Best Design Best Service
**Tel:020 8552 1194**
Fax:020 8548 1047 Mob:07956 274762
482 Barking Road, East Ham London E6 2LT
Web: www.signfituk.com E-mail: sales@signfituk.com

**TRICO SHIPPING WORLDWIDE**
Small cartons and large container
Full House packing and shipping to any destination of your choice.
Special Rates:- COUCHIN, TREVENDRAM
BOMBAY - CHENNAI
* Two regular shipments to Colombo per month
* Goods arrive within 17days
**20 YEARS IN SERVICE**
Call us for a friendly personal service
Tel: 020 8888 8787
Fax: 020 8888 5445
E-mail: trico@btclick.com
UNIT 4 - BUILDING C BUSINESS CENTRE, CLARENDON ROAD, WOODGREEN, LONDON N22 6XJ

# 60 புதியு துரித நீதிமன்றங்கள்

அதிகரித்து வரும் வீதிக் குற்றங்களை கட்டுப்படுத்த துரித நீதிமன்றங்கள் அமைக்கப்பட உள்ளது என அமைச்சர்கள் தெரிவித்து உள்ளனர். வீதிக் குற்றங்கள் அதிகரித்த உள்ள இலண்டன், மன்சஸ்றர் உட்பட்ட 10 பகுதிகளில் 60 துரித நீதிமன்றங்கள் அமைக்கப்பட உள்ளது. இத்துரித நீதிமன்றங்கள் களவு, கார் கடத்தல்கள் ஆகிய வழக்குகளை துரிதமாக மேற்கொள்ளும். மேலும் துப்பாக்கிகள் வைத்திருப்பது, கார்கடத்துவத பொன்ற குற்றங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட இருப்பதாகவும் கூறப்பட்டு உள்ளது.

# ஆசிய இளைஞர்கள் மீது போலீஸார் தொடர் சோதனை

கறுப்பினத்தவர்களை பொலிஸார் பரபட்சமாக நடத்துகின்றனர் என்ற குற்றச்சாட்டு சற்று தளர தற்போது ஆசிய இளைஞர்கள் மீது பொலிஸாரின் பார்வை பதிந்த உள்ளதாக இலண்டனுக்கான பொலீஸ் அறிக்கை தெரிவிக்கிறது. நிறுத்தி விசாரிக்கும் நடவடிக்கையில் பொலிஸார் கறுப்பினத்தவர்களை குறிவைத்து செயற்பட்டதாக கூறப்பட்ட குற்றச் சாட்டு ஸ்டீபன் லோறன்ஸ் விசாரணைக் குழுவினாலும் சுட்டிக் காட்டப்பட்டு இருந்தது. அதன் பின்னர் பொலிஸார் நிறுத்தி சோதிப்பதை நிறுத்தியதும் பின்னர் கறுப்பினத்தவர்களிடையே குற்றச் செயல்கள் எல்லை மீறி மீண்டும் நிறுத்தி சோதிக்க பொலிஸார் தூண்டப்பட்டனர். அதற்கு கறுப்பின சமூகமும் அதரவு அளித்தது இங்கு குறிப்பிடத்தக்கது.

ஆனால் தற்போது காவல்துறையினர் ஆசியர்களை அதிகம் தடுத்து நிறுத்தி சோதணையிடுவதாக குற்றம் சாட்டப்பட்டு உள்ளது. பெரும்பாலும் பாகிஸ்தானியர்களும் பங்களாதேஷியர்களுமே இவ்வாறான பரபட்சத்துக்கு ஆளாவதாக அச் செய்தி மேலும் தெரிவிக்கிறது. பெரும்பான்மையினருக்கும் ஆசியர்களுக்கும் இடையே ஏற்பட்ட இனக் கலகம், செப்ரம்பர் 11ஜத் தொடர்ந்து பரவியுள்ள முஸ்லீம் சமூகத்தின் மீதான நம்பிக்கையின்மை போன்றன இதற்கு காரணமாக இருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

# ஆபத்தினை விளைவிக்கும் கை தொலைபேசிகள்

## வாகனங்களில் கைத்தொலைபேசிகளை தடை செய்ய MPக்கள் வேண்டுகோள்

வாகனங்களில் கையில் வைத்து கைத்தொலைபேசி பயன்படுத்தவதை தடை செய்ய வேண்டும் என ஏப்ரம் 11ல் அனைத்துக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களும் கோரி உள்ளனர். கையில் தொலைபேசியை பிடித்து பேசிக் கொண்டு வாகனத்தை ஓட்டுவது போதையில் வாகனத்தை ஓட்டுவதற்கு ஒப்பானது என்ற புதிய ஆய்வு முடிவை 90 பா உ க்கள் வரை ஆதரித்து உள்ளனர். ஆபத்தான வேளைகளில் கையில் தொலைபேசியில உரையாடிக் கொண்டு இருந்தால் அது தேவையான நடவடிக்கை எடுப்பதை தாமதிக்கச் செய்து ஆபத்தினை ஏப்படுத்தும் என அப் பா உ க்கள் தெரிவித்து உள்ளனர். தற்போது கைத்தொலைபேசிகளை வாகனங்கள் ஓடிக்கொண்டு இருக்கும் போது பயன்படுத்த எந்தச் சட்டத் தடையும் இல்லை.

# மறைந்த இந்திய இயக்குநர் சத்தியஜித் ரேவை அமெரிக்கா கௌரவிக்கிறது

20ம் நூற்றாண்டின் சிறந்த இயக்குநராக விளங்கிய சத்தியஜித் ரேயின் படங்களை அமெரிக்கா தனது பார்வையாளருக்கு காட்ட ஏற்பாடு செய்து உள்ளது. தனது வாழ்க்கையை சினிமாவுக்கு அர்ப்பணித்த ரேய்க்கு 1992ல் ஒஸ்கார் விரது வழங்கப்பட்டது. இந்தியாவுக்கு வெளியே பெரிதாக மக்களால் அறியப்படாத ரேயின் படைப்புகளை அமெரிக்க மக்கள் பார்ப்பதற்கு ஓர் சந்தர்ப்பம் வழங்கப்பட்டு உள்ளது. 1955ல் பதர் பாஞ்சாலி ( குற்றொழுங்கையின் கீதம்) என்ற வெற்றிப்படத்தை தயாரித்த ரேய் சாருலதா, இசை அறை என்று 35 படங்களை இயக்கினார்.

இவரது மறைவுக்குப் பின் இந்திய அரசு அவருக்கு தனது உயர்ந்த பரிசான பாரத ரத்னா விருதை வழங்கியது. வாழும் போது கௌரவிக்க மறந்த இந்திய அரசின் விருதை ரேயின் மனைவி வாங்க மறுத்து விட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

# இலங்கைக்கு அகதிகளை திருப்பி அனுப்பாதீர்கள் ஐ நா கோரிக்கை

இலங்கையில் சமாதான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டாலும் அகதிகளைத் திருப்பி அனுப்பும் அளவுக்கு அங்கு நிலைமைகள் சீரடையவில்லை என ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்து உள்ளது. மார்ச் 28ம் திகதி வெளியிடப்பட்ட இந்தக் கருத்து உலகின் வெவ்வேறு நாடுகளில் அகதிகளை அனுப்புவதற்கு காத்திருக்கும் அரசாங்கங்களை சற்று கட்டுப்படுத்தும் என கிழக்கு இலண்டன் தமிழர் நலன்புரி அமைப்பின் வெளிக்கள அலுவலர் தெரிவித்து உள்ளார். திருப்பி அனுப்பப்படும் கட்டத்தில் 100,000 அகதிகள் வரை மேற்கு நாடுகளில் உள்ளனர் அவர்களுக்கு எந்த உத்தரவாதமும் வழங்கப்படாமல் கொழும்பில் கொண்டு சென்று இறக்கப்பட்டால் அங்கு ஓர் சமூகப்பதட்டம் உருவாகும் எனவும் அவர் மேலும் தெரிவித்து உள்ளார்.

# அவலம், வாழ்வு வளம் - ஒரு கண்காட்சி

பிரித்தானிய தேசிய கடல்சார்ந்த கண்காட்சியகம் இங்குள்ள அகதிகள் அமைப்புடன் இணைந்து 8 - 10 வரையான பட்டறைகளை மே மாதத்தில் நடத்த உள்ளது. இப்பட்டறையில் கடல் மூலம் இந்நாட்டுக்கு புலம் பெயர்ந்தவர்களின் வாழ்க்கையை ஓவியங்கள், கிறுக்கல் சித்திரங்கள், வர்ணங்கள், பேச்சு மொழிகள் மூலம் சித்தரித்துக் காட்ட திட்டமிடப்பட்டு உள்ளது. இதில் புலம்பெயர்ந்தவர்களின் தாயகம், அவர்களின் பயணம், கால் பதித்த நாட்டில் அவர்களின் வாழ்வு ஆகியன சித்தரிக்கப்பட உள்ளது.

கனடாவுக்கு சென்ற தமிழ் அகதிகள் வள்ளத்தில் மீட்கப்பட்ட போது ஒரு குழந்தை உயிரிழந்து காணப்பட்டதும், இத்தாலிக் கடலில் கப்பல் விபத்தில் இறந்தவர்களில் 80க்கு மேற்பட்டவர்கள் புலம்பெயர முற்பட்ட தமிழர்கள் என்பதும் ஏதியோப்பிய கடலில் மூழ்கிய விமானத்தில் இறந்தவர்களில் புலம்பெயர முற்பட்ட 7 தமிழர்களும் அடங்கி இருந்ததும் அதில் ஒருவர் மணப்பெண் என்பதும் அவலமான கடல் அனுபவங்கள். அதனையும் விட நூற்றுக்கணக்காண பெற்றோர்கள், சகோதரங்கள், குழந்தைகள் பாக்கு நீரிணையில் பலியானது வேதனையான உண்மைகள். இவற்றை பதிவு செய்வது எமது கடமை எனக் கூறுகிறார் யாழ் நூலக எரிப்பை 20 வருடங்களுக்கு பின் பதிவு செய்து வரலாற்று ஆவணமாக்கிய நூலகர் என் செல்வராஜா.




ஆம் தரமான வாசகர்களின்
நல்மதிப்பினை பெற்ற
ஒரே தமிழ் பத்திரிக்கை,

## உதயன்

இன்றே உங்களின் வியாபார
பெருக்கத்திற்கு நம்பிக்கையுடன்
விளம்பரப்படுத்தக்கூடிய
ஒரே தமிழ் பத்திரிக்கை
உதயன்.

உதயனில் விளம்பரம் செய்து
உங்களின் வியாபாரத்தில்
பிரகாசியுங்கள் என்றும்.
தொடர்புகளுக்கு தொலைபேசி:
020 8952 5677 / 07957 681 944

**பிரித்தானிய தேசம்
முழுவதும் உண்மையாக
கிடைக்கப்பெறும் ஒரே
பத்திரிக்கை உதயன்.**

## உதயன்

ஐந்து வருடங்களாக பிரசித்திப்பெற்ற உதயன் தமிழ் தேசிய பத்திரிக்கைக்கு

### நியூஸ் ரிப்போட்டர்ஸ் தேவை

(வீட்டில் இருந்தபடியே வேலை செய்யலாம்)

சமூக மனப்பான்மை உடைய திறமையான பகுதிநேர செய்தியாளர்கள் உடனடியாக தேவை.

தகுதி:

பத்திரிக்கை துறையில் ஓரளவேனும் அனுபவம் இருப்பின் முன்னுரிமை வழங்கப்படும்.
தமிழ் டைப்பிங் அவசியம் தெரிந்திருத்தல் வேண்டும்.
வீட்டில் சொந்தமாக கம்ப்யூட்டர் இருத்தல் அவசியம்.
அனுபவமில்லாதவர்களும் விண்ணப்பிக்கலாம்.
புகைபடத்துடன் விண்ணப்பித்தல் அவசியம்.

South London, North London ஆகிய பகுதிகளில் இருப்பவர்களும் Scotland, Wales ஆகிய பகுதிகளில் விண்ணப்ப படிவங்கள் வரவேற்கப்படுகின்றது.

கவனிக்கவும்:
உங்களால் [illegible] உங்கள் செய்திகள் [illegible]
Internet செய்திகள் [illegible]
[illegible]
[illegible]

நிரந்தரமான நல்ல சம்பளம் வழங்கப்படும்.

Job Contract உண்டு.

முறையுடன் விண்ணப்பிக்கவேண்டிய முகவரி:

The Editor
**UDHAYAN**
GNM (PVT) LTD.
25 -27 High Street Edgware,
Miidx. HA8 7EE

E-mail மூலமாகவும் விண்ணப்பிக்கலாம். அனுப்பவேண்டிய முகவரி:
thelondon@udhayan.freeserve.co.uk

(தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ளத் தேவையில்லை)

## உதயன்

ஐந்து வருடங்களாக பிரசித்திப்பெற்ற உதயன் தமிழ் தேசிய பத்திரிக்கைக்கு

### விளம்பர சேகரிப்பாளர்கள் தேவை

(முற்றிலும் fieldwork சம்பந்தமானது)

நல்ல திறமையும் அதிக ஊக்கமுடைய முழுநேர (அ) பகுதிநேர பத்திரிக்கை+டைரக்ட்டரி விளம்பர சேகரிப்பாளர்கள் உடனடியாக தேவை.

நல்ல சம்பளம்+இன்சென்டிவ் (OBT) வழங்கப்படும்.

கமிஷன் அடிப்படையில் மட்டுமே வேலை செய்ய விரும்புகின்றவர்களும் விண்ணப்பிக்கலாம்.

Target Achieversக்கு முன்னுரிமை வழங்கப்படும். Note: Job Contract உண்டு.

தகுதி:

விளம்பரத் துறையில் ஓரளவேனும் அனுபவமும், சொந்த வாகனமும் இருப்பின் முன்னுரிமை வழங்கப்படும்.
நன்றாக ஆங்கிலம் பேச தெரிந்திருத்தல் வேண்டும்.
விடாமுயர்ச்சியும், தன்னம்பிக்கையும், பேச்சுத் திறமையும், சகிப்புத்தன்மையும் அவசியம்.
அனுபவமில்லாதவர்களும் விண்ணப்பிக்கலாம்.
புகைபடத்துடன் விண்ணப்பித்தல் அவசியம்.

South London, NorthLondon, Central London, Birmingham, Nottingham, Manchester, Leicester ஆகிய பகுதிகளில் மற்றும் Scotland, Wales ஆகிய பகுதிகளில் விண்ணப்ப படிவங்கள் வரவேற்கப்படுகின்றது.

முறையுடன் விண்ணப்பிக்கவேண்டிய முகவரி:

The Business Manager
GNM (PVT) LTD.
25 -27 High Street Edgware,
Miidx. HA8 7EE

E-mail மூலமாகவும் விண்ணப்பிக்கலாம். அனுப்பவேண்டிய முகவரி:
thelondon@udhayan.freeserve.co.uk

# கொலை செய்யப்பட்ட வாலிபரின் உடல் சூட்கேஸினுள் யாழ்ப்பாணப் பெண்ணின் உடல்

## அடையாளம் கண்டுபிடிக்கப்பட்டது - கொலை வழக்கு ஆரம்பம்

மனிதப் பண்புக்கு புறம்பாக கோரமாக கொல்லப்பட்டு கிங்ஸ்பரி பாக்கில் அடையாளம் தெரியாமல் மறைக்கப்பட்ட கொலையில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்பட்டு உள்ளனர். பெப்ரவரி 19ம் திகதி தனது நாயுடன் கிங்ஸ்பறி றோ கிறீன் பார்க்கினூடாக நடந்து சென்றவர் கண்ட அரையும் குறையுமாக எரிக்கப்பட்ட உடல சுபேந்தர் ராமச்சந்திரன் என அடையாளம் காணப்பட்டு உள்ளது. வெம்பிளியில் இருந்த இந்த 18 வயது இளைஞனின் கொலை தொடர்பாக செ தில்லைநாதன் (21), பிரதீப் சிவநேசன் (18), மற்றுமோர் 17 வயது இளைஞருமாக மூவர் மீது கொலைக் குற்றம் சுமத்தப்பட்டு உள்ளது. மூன்றாவது குற்றவாளி வயது குறைவான காரணத்தால் அவரது பெயர் வெளியிடப்படவில்லை.

கொலைக் குற்றம் சாட்டப்பட்ட மூவரம் மார்ச் 28ம் திகதி பிறன்ட் மஜிஸ்ரேற் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டனர். இக்கொலை தொடர்பாக மேலும் இருவர் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டு உள்ளனர். இவர்கள் மற்றுமோர் திகதியில் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவார்கள்.



கொலை செய்யப்பட்ட வாலிபர்

ஆரம்பத்தில் சிறுவர் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டு கொல்லப்பட்டு இருக்கலாம் என கருதப்பட்ட இக் கொலை இரு வாரங்களுக்குப் பின் சுபேந்தரின் மாமனார் உடலை அடையாளம் கண்டதை அடுத்து உண்மைகள் வெளிவந்தது. மேலும் இறந்தவரை அடையாளம் காண உயிரியல் பரிசோதணையை மேற்கொள்ள ஸ்கொடலண்ட் யாட் இலங்கைக்கு சென்றிருந்தது குறிப்பிடத்தக்கது.

## பெண்ணின் கணவர் கொலை செய்ததை ஒத்துக் கொண்டார்



கைது செய்யப்பட்ட கொலையாளிகள் உதயகுமார் சகோதரி குமுதவள்ளியுடன்

சென்னை பாரிமுனையில் மீட்கப்பட்ட பெண்ணைத் தான் கொலை செய்ததாக அப்பெண்ணின் கணவர் உதயகுமார்(35) கொலை இடம் பெற்று ஆறு மாதங்களுக்குப் பின் பெப்ரவரியில் சென்னை பொலிஸில் தெரிவித்து உள்ளார். கூலித் தொழிலாளியான 5ம் வகுப்பு வரையுமே படித்த உதயகுமார் அயல் வீட்டு அழகியான ஜானகியை காதலித்து திருமணம் செய்து 11 ஆண்டுகளுக்குப் பின் கொலையும் செய்து உள்ளார். கௌசிகன்(8), கௌதம்(4) ஆகிய இரு குழந்தைகளின் தாயான குடிப் பழக்கம் உடைய ஜானகி நடத்தை சரியில்லாதவர் என்றும் அதனால் ஜானகியை ஒரு லாட்ஜில் வைத்து போதையை கொடுத்துவிட்டு கழுத்தை நெரித்து கொன்றதாக உதயகுமார் பொலிஸில் தெரிவித்து இருக்கிறார்.

தொழில் தேடி இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு குடும்பத்துடன் சென்னை திருவான்மியூர் நேதாஜி நகருக்கு தனது சகோதரி குமுதவள்ளியிடம் உதயகுமார் வந்துள்ளார். ஆனால் மனைவி ஜானகிக்கு அங்கு இருக்கப் பிடிக்காததால் அவர் மீண்டும் இலங்கைக்கு சென்று விட்டார். பின்னர் 2001 ஓகஸ்ட் 8ம் திகதி சென்னைக்கு வந்து உள்ளார். அப்போது வாக்குவாதம் ஏற்பட்டு ஜானகிக்கும் குமுதவள்ளிக்கும் இடையே வார்த்தைகள் அநாகரிகமாக வெளிப்பட உதயகுமார் ஜானகியை அடித்து உள்ளார்.

அதன் பின்னர் அக்காவும் தம்பியும் ஜானகியை தீர்த்துக் கட்ட முடிவு செய்தனர். அதன் படி லாட்ஜில் வைத்து நெரித்து கொன்று விட்டு சூட்கேஸில் போட்டு பாரிமுனை பஸ் நிலையத்தில் வைத்து விட்டு உதயகுமார் தப்பிவிட்டார்.

இவ்வாண்டு ஜனவரியில் சென்னைக்கு வந்த ஜானகியின் சகோதரி தன் தங்கையை விசாரித்து உள்ளாள். ஆனால் உதயகுமார் ஜானகி வேதாரண்யத்தில் இருப்பதாக பொய் கூறி உள்ளார். அதனை ஏற்றுக் கொள்ளாத ஜானகியின் சகோதரி உதயகுமார் தனது சகோதரியை கொலை செய்ததாக திரவான்மியூர் பொலிஸில் புகார் செய்து உள்ளார். உதயகுமார் தான் கொலை செய்து வேதாரண்யத்தில் புதைத்ததாக கூறி பொலிஸாரை ஏமாற்றி வந்து கொண்டிருந்தார். அச்சமயம் பாரிமுனையில் கண்டெடுக்கப்பட்ட பிரேதம் தொடர்பாக உதயகுமார் சென்னைக்கு அழைக்கப்பட்ட போது அனைத்து உண்மைகளும் வெளிச்சத்துக்கு வந்தது.

நாடுவிட்டுநாடு மாறினாலும் பிறவி குணங்கள் மாறவில்லை என்பது இது போன்ற சம்பவங்கள் மூலம் பிரதிபலிக்கின்றது.

# வோல்தம்ஸ்ரோவில் கடை உடைப்பு

வோல்தம்ஸ்ரோ ஹையம்ஸ் பார்க் பட்ஜன்ஸிற்குள் காரை ஓட்டி களவு முயற்சி. மார்ச் கடைசிப்பகுதியில் இடம்பெற்ற இக்கொள்ளை முயற்சியில் ஈடுபட்ட இரு கறுப்பினத்தவர்கள் விடியோ ஆதாரத்துடன் பிடிபட்டு உள்ளார். பல தமிழ் இளைஞர்கள் வேலை செய்யும் இந்த சுப்பர் மாக்கற்றின் கிளை மீது இச்சம்பவத்துக்கு சில தினங்கள் முன்னரும் இப்படியான ஒரு சம்பவம் நடந்து உள்ளது. அக்கடையினுள் இருந்த வங்கியின் பணம் வழங்கும் Cash Point யை உடைத்து பணம் எடுப்பதே கள்வர்களின் நோக்கமாக இருந்து உள்ளது. ஆனால் அச்சமயத்தில் அது பழுதடைந்து இருந்ததால் கள்வர்கள் ஏமாந்து போயினர்.

இக்களவு முயற்சியைத் தொடர்ந்து அங்கு பாதுகாவலர் ஒருவர் அமர்த்தப்பட்டு இக்கள்வர்களுக்காக காத்திருந்துள்ளார். அவர்களும் காரை ஓட்டி உள்ளே நுழைய முற்பட தயார் நிலையில் இருந்த பாதுகாவலர் பொலிசை அழைத்தார். இரு கள்வர்கள் பொலீஸில் மாட்டினர். தற்போது கார் செலுத்தப்பட்ட பகுதி அடைக்கப்பட்டு உள்ளது. இச்செய்தி அச்சுக்கு போகும் வரை திருத்தி முடிக்கப்படவில்லை.

இதே மாதிரியான மற்றுமோர் சம்பவம் இல்போர்ட் லேனில் ஏப்ரல் முற்பகுதியில் இடம்பெற்று உள்ளது. நகைக் கடையின் தகரத் தடுப்பை உடைத்த கள்வர்கள் காரை பார்வைக்கு வைக்கப்பட் யன்னலூடாக பின் பக்கமாக ஓட்டி டைத்துச் சென்றனர் எனத் தெரிவித்த அதன் உரிமையாளர் அவர்கள் கொள்ளை இட்டதன் பெறுமதி £18,000 எனத் தெரிவித்து உள்ளார்.

# இலவச ஆங்கில வகுப்புகள் - NUTA

அகதிகளாகவோ, அரசியற் புகலிடம் கோரியோ பிரித்தானியாவுக்கு வரும் இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவளித்து வரும் Newham United Tamil Assosiation தற்போது அவர்களுக்கு ஆங்கில வகுப்புகளையும் நடத்த திட்டமிட்டு உள்ளது. 1993ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த அமைப்பு கடந்த ஆண்ட தர்மஸ்தாபனமாக பதிவு செய்யப்பட்டு உள்ளது. இலங்கைத் தமிழருக்கு குடிவரவு, சமூகநலம் , வதிவிடம், வேலைவாய்ப்பு போன்ற துறைகளில் இந்த அமைப்பு இலவச ஆலோசனைகளை வழங்கி வருகிறது.

# டொரன்ட்டோ விமான நிலையத்தில் தமிழ்ப்பெண் மரணம்

ஏப்ரல் 10 திகதி இலங்கையில் இருந்து தனது மகனிடம் வந்த மூன்று குழந்தைகளின் தாயார் மகனைப் பார்ப்பதற்கு முன்னரேயே அகால மரணமடைந்தார். கனடாவுக்கு வந்து 10 ஆண்டுகளுக்குப் பின் தன் தாயையும் இரு சகோதரங்களையும் கனடாவுக்கு அழைத்த ரமேஸ் துரைராஜாக்கே இந்த சோகம் நிகழ்ந்தது. கதே பசுபிக் விமானத்தில் இருந்து இறங்கி றொறன்ரோ சர்வதேச விமானத்தளத்துக்கு வந்தடைந்த யாழ்ப்பாணம் காரைநகரைச் சேர்ந்த ஜெயலட்சுமி துரைராஜா குடிவரவு அலுவலர்களால் பரிசோதணைக்கு உட்பட காத்திருந்த சமயம் மயக்கமடைந்து விழுந்தார். அவருக்கு அங்கு முதலுதவி வழங்கப்பட்ட போதும் எந்தப் பலனும் ஏற்படவில்லை. அதனை அடுத்து அவர் எற்றோபிக்கோ மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்லப்பட்டார். ஆனால் சிகிச்சைகள் பலனளிக்காத நிலையில் அத்தாய் காலமானார்.

# வரவு செலவுத் திட்டம்

பிரித்தானியாவின் வரவு செலவுத் திட்டம் ஏப்ரல் 17ம் திகதி சமர்ப்பிக்கப்பட இருக்கிறது. தற்போதைய பட்ஜட்டில் வருமான வரியை அதிகரிக்க நிதி அமைச்சர் கோர்டன் பிறவுன் திட்டமிட்டு உள்ளார். பிரதமர் ரொனி பிளயர் அதற்கு அனுமதி வழங்கி இருப்பதாக செய்திகள் வெளிவந்து உள்ளது. உலகின் நான்காவது பெரிய பொருளாதாரத்தை உடைய பிரித்தானியாவின் சுகாதாரம், போக்குவரத்து ஆகிய பொதுத் துறைகள் மோசமான நிலையில் இருப்பதால் அவற்றை சீர்படுத்த மேலதிக முதலீட்டை செய்ய அரசு திட்டமிடுகிறது.

# பகவத் கீதை வகுப்புகள்

மகா பாரதப் போரின் போது கிருஷ்ண பரமாத்மா அர்ச்சுனனுக்கு எடுத்துக் கூறியதாக கூறப்படும் போதனைகளைக் கொண்ட பகவத் கீதையை சைவ முன்னேற்றச் சங்க மண்டபத்தில் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது. பல மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டு இன, மத, பேதமின்றி அனைவருக்கும் பொதுவான பகவத் கீதையை படிப்பது விஞ்ஞான, மெய்ஞான அறிவுக்கு மிகவும் அவசியம் என அன்னை காயத்திரி அவர்கள் தெரிவிக்கிறார்.

HOMOEOPATHIC HEALTH CLINIC
* For Consultation and Medicines
* For your full confidential Lady Consultant
* 10% Discount with this Advertisement
Tel: 020 8574 4281
Fax: 020 8843 9220
159, The Broadway, Southall, Middx. UB1 1LP (UK)

MANOR FURNISHERS
For complete furnishing
Quality Beds - unbeatable price
Bargain International Ltd.
For Surgical Instruments at Special Discount Rates
Call: 020 8514 8293
Mob: 07811 902 479
562-564, Romford Road
Manor Park - E12

HEATHROW KITCHENS
QUALITY KITCHENS & BEDROOMS AT AFFORDABLE PRICES 020 8813 6952
Trade Accounts Welcome

140 UXBRIDGE ROAD, HAYES
FAX: 020 8581 1005
www.heathrowkitchens.co.uk
Guaranteed to beat any competitive quote

# அகதிகளுக்கு கதவுகளை அடைக்கும் டென்மார்க்

மிகவும் லிபிரல் நாடாகவும் அகதிகளுக்கு ஆதரவாகவும் நீண்ட காலம் குரல் கொடுத்து வந்த ஸ்கண்டிநேவிய நாடான டென்மார்க் தற்போது அகதிகளுக்கு தன் கதவுகளை அடைக்க முற்பட்டு உள்ளது. டென்மார்க்கில் கொண்டுவரப்பட்ட புதிய சட்டம் இதுநாள் வரை அகதிகள் அனுபவித்து வந்த நலன்களை மட்டுப்படுத்துவதாக அமைந்து உள்ளது. ஆனால் இப்புதிய சட்டம் சிறப்பு தேர்ச்சி உடன் தொழில் தேடி வருபவர்களுக்கு இருந்த கட்டுப்பாடுகளைத் தளர்த்தி உள்ளது. இப்புதிய சட்டம் குடிவரவாளர்களை வர அனுமதிப்பதன் மூலம் பல்லின சமூகத்தை வளர்க்க உதவும் என டென்மார்க் ஆட்சித்தலைவர் தெரிவிக்கிறார். ஆனால் இச்சட்டம் இனப்பாரபட்சமானது என அங்குள்ள மனித உரிமை அமைப்புகள் தெரிவிக்கின்றன.

மேலும் டென்மார்க்கின் இறான்ஸ் பகுதியில் மார்ச் முடிவில் முகாம் ஒன்றுக்கு தீ வைக்கப்பட்டு உள்ளது. அகதிகளும் இயலாதவர்களும் வீடற்றவர்களும் தங்கும் இம்முகாம் தீவைக்கப்பட்டதில் நால்வர் கொல்லப்பட்டும் 16 பேர் காயமடைந்தும் உள்ளனர். இறான்ஸ் பகுதியிலும் அதனை சுற்றிய பகுதிகளிலும் வாழும் நூற்றுக்கணக்கான இலங்கைத் தமிழர்கள் இம்முகாமில் சில காலம் தங்கி இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. இங்கு தற்காலிகமாக தங்கவைக்கப்பட்ட பின்னரே அவரவர்க்கு தங்குவதற்கு வசதிகள் செய்து கொடுக்கப்படுவது வழமை. தீ வைப்புச் சம்பவத்துடன் தொடர்பாக இரு இளைஞர்கள் கைது செய்யப்பட்டு உள்ளனர். இத் தீ வைப்பு டென்மார்க்கில் மாறிவரும் அரசியல் சூழலை படம் பிடித்து காட்டுவதாக அங்குள்ள தமிழர்கள் கூறுகிறார்கள்.

# ஒரு சிங்களவரின் போராட்டம் தமிழ் இளைஞனின் வாழ்வை காப்பாற்றியது

இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்ட பிறேமன் பகுதியைச் சேர்ந்த தமிழ் இளைஞன் ராஜன் மெண்டிஸ் எனும் மனித உரிமைவாதியின் தொடர்ச்சியான போராட்டத்தால் பரிஸில் இருந்து மீண்டும் ஜேர்மனிக்கு அழைக்கப்பட்டார். இராஜனை விடுவிப்பதற்காக மெண்டிஸ் பல வழிகளிலும் போராடி இறுதியில் வெற்றியும் அடைந்தார். மெண்டிஸின் இந்த மனிதாபிமானச் செயற்பாடு பல தமிழ் உள்ளங்களை வெற்றி கொண்டதுடன் அவருக்கு பாராட்டுகளும் வந்து குவிந்ததாக ஜேர்மனியில் இருந்து வெளிவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இலங்கையில் கடந்த கால் நூற்றாண்டுகளாக யுத்தம் நடைபெற்றாலும் இவ்விரு இனங்களிடையேயும் புரிந்துணர்வு இருந்து கொண்டே வந்து உள்ளது. சிங்களவர்களின் இனவாதத்தை தட்டிக் கேட்ட சிங்களவர்களும் சிங்களமக்களின் படுகொலைகளைத் தட்டிக் கேட்ட தமிழர்களும் இருந்தனர். ஆனால் துரதிஸ்டவசமாக பேச்சுவார்த்தைகளில் ஈடுபடாத சமயங்களில் எல்லாம் இரு தரப்பு பிரதான ஊடகங்களும் வன்மத்தையே வளர்த்தன என்பது வேதனையான உண்மை. இப்போது வந்த இந்த புரிந்துணர்வு 1985 அல்லது 1987 ல்லோ வந்திருந்தால் பல்லாயிரம் உயிர்கள் காப்பாற்றப்பட்டு இருக்கலாம். காலம் தாழ்த்தி வந்தாலும் இரு இனங்களும் புரிந்துணர அதன் தலைமைகள் வழிவிட்டமைக்கு சர்வதேசமே பாராட்டுக்களை தெரிவிக்கிறது.


தமிழனனே தமிழனுக்கு குழிபறிக்கும் கேவல செயல்களுக்கு இதுபோன்ற நல்ல உயர்வுள்ள சமூக செயல்கள் இனியாவது ஓர் எடுத்துக்காட்டாக அமையட்டும். வேறு இனத்தவர் எடுத்துக்கொள்ளும் இதுபோன்ற அக்கறைகள் அவசியம் பாராட்டப்படவேண்டிய விடயமாகும்.

# தமிழர் சமூக வீட்டு வசதிக் கழகத்தில் தில்லுமுல்லு பிடிபட்டது TCHA தினகரன் பதவி நியமனம் தொடர்பான வழக்கு

தமிழர்களுக்கு வீட்டு வசதிகளை வழங்கிவரும் Tamil Community Housing Assosiation (TCHA) Ltd க்கு எதிராக தினகரன் செய்த முறைப்பாடு ஸ்ரட்போர்டில் உள்ள தொழிலக விசாரணைக் குழுவின் (Industrial Tribunal) விசாரணைக்கு வந்து உள்ளது. ஏப்ரல் மாதம் 15ம் திகதி விசாரணைக்கு வந்துள்ள இந்த வழக்கு பொதுமக்கள் அறிந்திராத பல தில்லுமுல்லுகளை வெளிக்கொண்டுவர உள்ளது. (வழக்கின் 2ம் நாளுடன் இச்செய்தி அச்சுக்குப் போகிறது. உதயனின் அடுத்த இதழில் வழக்கின் முழுவிபரங்களும் வாசகர்களுக்கு அறியத்தரப்படும்.)

TCHA விளம்பரப்படுத்தப்பட்ட பதவி ஒன்றுக்கு விண்ணப்பித்து இருந்த தினகரன் தன்னை அப்பதவிக்கு தெரிவு செய்யாமல் விட்டது அந்நிறுவனத்தில் பொறுப்பில் இருந்தவர்களின் சதி என குற்றம்சாட்டி இருந்தார். மேலும் இப்பதவிக்கு தெரிவு செய்யப்பட்ட ஜெகதேவன் அதற்குரிய தகமைகள் இல்லாதவர் என்பதும் தினகரனின் குற்றச்சாட்டு. ஜெகதேவன் வரும் உள்ளாட்சி மன்றத் தேர்தலில் பிறன்ற் பகுதியில் கவுன்சிலர் பதவிக்கு போட்டியிடுகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

# இந்து சமயத்திற்கு ஓர் தகவல் வழிகாட்டி




பல இலட்சம் இந்துக்கள் வாழும் இந்த நாட்டில் முதற் தடவையாக இந்துக்களுக்கான தகவல் நூல் இலவசமாக வெளியிடப்பட்டு உள்ளது. எட்ச்வெயரில் உள்ள ஸ்ரீ ராஜ ஸ்ரீ காயத்திரி மாதா திருஸ்தலத்தினால் வெளியிடப்பட்ட இத் தகவல் நூல் 130 பக்கங்களுடன் பக்கத்தக்குப் பக்கம் இந்து மதம் பற்றிய தகவல்களுடன் வெளிவந்து உள்ளது. இப்படி ஒரு தகவல் நூல் உலகின் எந்தப் பாகத்திலும் இலவசமாக வந்திரக்க மாட்டாது என்கிறார் பிரித்தானியாவில் கடந்த 20 ஆண்டுகளாக வாழும் குஜராத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட வசி பட்டேல்.

கலியுகம் முடிந்து சத்யுகம் பிறக்க போவதாக குறிப்பிட்டு உள்ள இத் தகவல் நூலுக்கு மூலமாக இருந்த சற்குரு ரவிக்குமார சுவாமிகள் இந்நூல் வளரும் தலைமுறையினருக்கு எமது இந்துக் கலாச்சாரத்தைப் பற்றிய பல விபரங்களைத் தெரிவிக்கிறது எனக் குறிப்பிட்டார். பெரியவர்கள் இந்நூலை தங்கள் குழந்தைகளுக்கு சொல்லிக் கொடுப்பதற்கு பயன்படத்த முடியும் எனவும் சுவாமிகள் மேலும் தெரிவித்தார்.

உலகின் சிறந்த காலாச்சாரங்களில் ஒன்றை பின்பற்றும் இந்துக்களாகிய நாம் எமக்குள் உள்ள எதிரியான வெறுப்பு, கோபம், ஆணவம், ............ போன்றவற்றைக் கைவிட்டு; நாம் யார்? நாம் ஏன் இந்தப் பூமியில் பிறந்தோம்? இதுவரை நாம் என்ன செய்தோம்? என்பதை எல்லாம் சற்றேனும் சிந்தித்து இந்த உலகில் சில நல்ல காரியங்களைச் செய்ய வேண்டும். நமது இந்து இளம் சந்ததிகளுக்கு ஓர் உன்னதமான கலாச்சாரத்தின் மேன்மைகளை சுட்டிக்காட்ட வேண்டும் என்பததை இந்த வழிகாட்டி கூறுகின்றது என சற்குரு சுவாமிகள் கூறினார்.

J.A.K.AUTOS
MOT FAILURE AND MACHINICAL REPAIRS AND BODY WORK UNDERTAKEN ALSO JAPANESE SECOND HAND CAR SPARES.
PLEASE CALL *ISLAM* ON 020 8991 5454
MOB: 07956 869 039
27/B AINTREE ROAD, PERIVALE MIFFLESEX UB6 7PL

ADVERTISE FOR BEST RESULTS
020 8952 5677
The UDHAYAN உதயன்

AUTO PLUS
THE WORKSHOP
MOT TEST CENTRE
Servicing Clutches, Brakes, Gearboxes, Engines, Exausts, etc.
Tel: 020 8520 0047
020 8521 3000
Fax: 020 8520 0048
72-73 Brunner Road, Walthamstow, London E17
FREE TYRE & BRAKE SAFETY CHECKS
All mechanical works undertaken unbeatable prices
Tyres, Exausts, Brakes, Part worn tyre specialists Balancing, Punctures, Tracking
Tel: 020 8521 9696
152a Hoe St., Walthamstow, London E17 (Corner of Hatherley Rd.)

CCR INSURANCE BROKERS
For your motor, commercial, household
Also travel, medical & manymore insurance needs
CALL US
WEMBLEY 0208 904 9686
Ravi 96, Sudbury Avenue
EASTHAM 020 8548 1234
Shankar 132 Katherine Road

பிறந்தநாள் மற்றும்
சிறு விளம்பரங்களுக்கு
020 8952 5677

ALLIED MOTORS U.K.
MECHANICAL & CRASH REPAIRS
Specialists in British, Continental and Japanese Cars.
Servicing, repairs, tuning, insurance work undertaken
Breakdown Service
MOT while you wait
Abbey Estate, Mount Pleasent, Wembley, Middx. HA0 1QT
Tel: 020 8903 5466
Fax: 020 8900 0120

Our aim is to cut your petrol costs by half
LP GAS Association
★ Environmentally friendly fuel
★ Longer engine life
★ Fully trained staff
★ 5yrs/60k miles warranty
★ Top of the range kits used
★ Multipoint Systems Av.
★ Free courtesy Car
★ Member of the largest network in UK
Tel: 020 8591 9292
Fax: 020 8591 9294
www.biglpg.com 13' River Rd, Barking

C.B.MOTORS (BALA)
ARCH NO 45
OFF ROXETH GREEN AVE
SOUTH HARROW
MIDDLESEX
HA2 8AA
TEL:020 8423 9984
PLEASE CALL BALA FOR AUTOMOTIVE NEEDS

BUYING AND SELLING ALL TYPE OF JAPANESE CARS (LESS THAN FIVE YEARS OLD)
LONG TERM CAR HIRE SERVICES ALSO AVALABLE FOR MINICAB DRIVERS
UNDERTAKING REPARES FOR VARIOUS CARS
SPECILISED IN BODY WORKS, AUTO ELECTRICAL WORKS, ACCIDENT REPAIRS, MOT ARRANGEMENTS ETC
AFRIENDLY GARAGE WITH VERY REASONABLE RATES

# UNBEATABLE PRICES

*** TILES * MARBLE * GRANITE * KITCHENS * BATHROOM * WOODFLOORING * FURNITURE**

IMPORTERS





IMPORTERS

ELITE TILES are undeniably UK's No.1
Importers, Distributors, Wholesalers and Retailers
of




*Specialists in Granite Worktops and Marble Vanity Tops to order*

**50% discount off RRP**




## £2 MILLION POUNDS OF AVAILABLE STOCK TO CLEAR

**(collect same day)**

Web Site: www.elite-tiles.co.uk

**020 8202 1806 (12 lines)**
**020 8202 8608 (Fax)**
**Elite House, The Broadway,**
**West Hendon, London, NW9 7BP**

Open Mon-Fri 8.30am-6pm - Sat 10am-5pm - Sun 10am - 2pm

Styles – AMAZING TILES – Choice
Value – Quality

DIRECT FROM FACTORIES TO YOU

Discount - 1/3rd Off - Wholesale Prices
Direct to Trade & Public

All Tiles on Displays carried in Stock
So, Hurry - Hurry - Hurry

OPEN 7 DAYS A WEEK
LATE NIGHT ON MONDAY

Come and see for yourself
and then tell your friends

Tel: 020 8838 4900
Fax: 020 8838 4495

45, Park Royal Road, London NW10 7LQ
(Opposite Asda)

# மகாராணியின் மறைவு

## - ஒரு நூற்றாண்டின் முடிவு





20வது வருடங்களுக்கு முன்னரே தனது இறுதிக் கிரியைகள் இப்படித்தான் நடத்தப்பட வேண்டும் என்று கூறி இருந்த மகாராணியின் தாயாரின் இறுதிச் சடங்குகள் அவ்வாறே நடந்தேறின. இளவரசி டயானாவின் மறைவை அனைத்த ஊடகங்களுமே தமது வழமையான பெரும்பாலான அனைத்து நிகழ்ச்சிகளையும் நிறுத்தி மிகைப்படுத்தி வெளியிட்டன என்ற குற்றச்சாட்டு வந்தது. அதனைத் தொடர்ந்து மகாராணியின் தாயாரின் மறைவை எப்படி வெளிப்படுத்த வேண்டும் என அவ்வூடகங்கள் ஏற்கனவே திட்டமிட்டு இருந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது. மகாராணியின் தாயாரின் வயது, அவர் நோய்வாய்ப்பட்டு இருந்தது இவை எல்லாமே அவரது மறைவை கட்டியம் கூறி இருந்தன.

இருப்பினும் ஒரு அம்மாவின் மறைவு, அம்மம்மாவின் மறைவு, பாட்டியின் மறைவு இவற்றுடன் தேசத்தின் நன்மதிப்பைப் பெற்ற ஓர் மதிப்பிற்குரிய பெண்ணின் மறைவு பிரித்தானிய மக்களிடையேயும் கொமன்வெல்த் நாட்டு மக்களிடையேயும் ஒரு சோகத்தை ஏற்படுத்தவே செய்தது. இதற்கு முக்கிய காரணம் இரு உலகப்போர்களை சந்தித்த இப்பெண்மணி அவ்விரு போர்களிலும் போர்விரர்களுக்கு கடமைகளைச் செய்து ஆதரவாக இருந்தது தான். 1939ல் இரண்டாவது உலகப்போரில் தனது பிள்ளைகளான இளவரசிகளை பாதுகாப்புக்காக கனடாவுக்கு அனுப்புவதற்கு மறுத்தார். ‘இளவரசிகள் நான் இல்லாமல் எங்கும் செல்லமாட்டார்கள், நான் மன்னவர் இல்லாமல் எங்கும் செல்லமாட்டேன். மன்னவர் ஒரு போதும் நாட்டை விட்டுச் செல்லமாட்டார்.‘ இந்த உறுதியான தேசப்பற்றுத் தான் மக்களை அவரிடம் பற்றுக்கொள்ள வைத்தது. இதற்காகவே பல இலட்சம் மக்கள் ஒன்பது மணித்தியாலங்கள் வரை காத்திருந்து தமது இறுதி அஞ்சலியைத் தெரிவித்தனர்.

இரண்டாம் உலகமகா யுத்தத்தில் ஆயிரக்கணக்கான இந்திய வீரர்கள் பிரித்தானிய படைகளுடன் தோளோடு தோள் நின்று களம் புகுந்து பிரித்தானியப் பேரரசுக்காக யுத்தம் செய்தனர். இவர்கள் காயப்பட்டு வந்தபோது மறைந்த முன்னாள் மகாராணி எலிசபத் அவர்களுக்கு ஆதரவு அளிக்கத் தயங்கவில்லை. (ஆனால் பிரித்தானியாவுக்காக உயிர்நீத்த இந்த இந்திய வீரர்களின் தியாகம் சில ஆண்டகளுக்கு முன்னர் வரை நினைவு கூரப்படாமல் கௌரவிக்கப்படாமல் இருந்தது. ) தனது 101 ஆண்டுக் காலத்தில் துணைக் கண்டத்துக்கு சென்றிராத மகாராணியின் தாயார் இந்திய மக்களிடத்தில் மிகுந்த மதிப்பை வெளிப்படுத்தி இருந்தார். சில ஆண்டுகளுக்கு முன் இந்தியா செல்லத் திட்டமிடப்பட்ட போதும் உடல் நிலைகாரணமாக பயணத்தை மேற்கொள்ள முடியவில்லை.

20ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பிறந்து மூன்று தலைமுறைகளைத் தூக்கி வளர்த்து, மை ஒற்றி எழுதுவதில் இருந்து இன்ரநெற் வரை கண்டு, குதிரை வண்டிகளில் இருந்து ஆகாயவிமானம் வரை பல அரிய விஞ்ஞான கண்டு பிடிப்புகளுக் கூடாக வாழ்ந்து சூரியன் அஸ்தமனமாகாத பிரித்தானிய பேரரசின் மகாராணியாக இருந்து இறுதி வரை மக்களின் மத்தியில் தனக்கென ஒரு இடம்பிடித்த இவரின் முடிவு ஒரு நூற்றாண்டின் முடிவே.

LEADING TOUR OPERATOR FOR DUBAI & EUROPE – YOUR NO. 1 CHOICE
HARI AUM HOLIDAYS
Unique Low Cost Tours with A Touch of Culture!

DUBAI
SHOPPING & ADVENTURE TOUR
ALL EXCURSION INCLUSIVE & VEGETARIAN MEALS
SHOP TILL YOU DROP AND DANCE TILL DAWN
Over 50 Tours Successfully Operated to-date
Full Customer Satisfaction.
DUBAI SHOPPING
£525pp+
(525 Travel Insurance pp)
GOLD SURPRISE
DURING 2001
EVERY PERSON RECEIVES
22ct Gold
Hari Aum Surprise

EUROPEAN TOURS
FRANCE & SWISS Every Tuesday - £199 (5 Days)
N. CYPRUS - - £ 525 (8 Days)
JEWELS OF MEDITERRANEAN - LUXURY CRUISE
Be part of it (8 Days)

BANGOK & PATTAYA (BEACH) 9 Days
(6 Night) £650 + pp
HURRY! LIMITED PLACES ONLY
Call us FREE for details on other tours & services on
0800 092 1296
e-mail: aum9@hotmail.com
All Holidays with Air Travel is operated by Atlantic & Pacific Travel Ltd. ATOL 2215
360 North Circular Road
Neasden, London NW2 7DP
Tel: 020 8452 0350
Fax: 020 8452 1144
RETAIL AGENTS FOR MAJOR ATOL HOLDERS

No.1 Hindu Directory
For your Advt.
please contact
020 8952 5677

16 Minerva Road
Park Royal
London NW10 6HJ UK
Shiv Souvenirs Ltd
Importers and Wholesale Distributors
Fancy Goods TOYS
gifts Souvenirs
and many more
Tel: 020 8963 0512/3
Fax: 020 8963 0518
Email:shivsouvenirs@aol.com

Sp
Spring FX Group Ltd.
* No Commission on Currencies
* Excellent Rate of Exchange
* Travellers Cheques
Spring Bureau de Change Ltd.
Head Office:
32 Spring Street,
Paddington, London W2 1JA
Tel: 020 7723 7960 Fax: 020 7724 7712
Branch:
176 Earls Court Road,
Earls Court, London SW5 9QQ
Tel: 020 7835 0945
www.Springfx.com

## விடுப்பு விசிறிகளுக்கு

# ஐய்யய்யோ அநியாயம்

## என்னதான் நடக்குது இங்கே

இலண்டனில் இயங்கிவரும் வடமாகாண இந்துக் கல்லூரிப் பழைய மாணவா் சங்கத்தின் தலைவராக கிறிஸ்தவர் ஒருவர் நியமிக்கப்பட்டு உள்ளார். இவர் யாழ் மாவட்டத்திலுள்ள கத்தோலிக்க ஆயர்களுக் கூடாக சில கணணிகளை பாடசாலைக்கு அனுப்பி வைக்க முயற்சித்தார். ஐயோ இந்துப் பாடசாலையை கிறிஸ்தவர்கள் நடாத்துகிறார்கள் என சில பழைய மாணவர்கள் புலம்புகிறார்களாம். இதென்ன கூத்து பேச்சுக்கு பேச்சு எங்கட சனம், எங்கட சனம் என்னும் பேச்சக்களின் உன்மையான அர்தம் தான் என்ன.

# புதிய நியமனம்

மிடில்செக்ஸ் பகுதியில் வார இறுதிநாட்களில் இயங்கிவரும் தமிழ்ப் பாடசாலையின் அதிபர் இவ்வருட இறுதிக்குள் ஓய்வு பெற இருக்கிறார். இங்கிலாந்தில் இயங்கிவரும் தமிழ்ப் பாடசாலைகளில் இது பழமை வாய்ந்தது. 1990 ல் நிர்வாகத்தில் ஏற்பட்ட குழப்பத்தினால் இப்பாடசாலை இரண்டாகியது. இப் பாடசாலையின் புதிய அதிபராக பெண் ஒருவர் நியமிக்கப்பட இருக்கிறாராம். இதுக்குள் என்ன பம்மாத்து வேலை இருக்கின்றதோ...

# கிட்டப் பார்த்தால் தெரியாதோ

இலண்டனில் உள்ள தமிழ் தொலைக் காட்சி ஒன்றுக்கு காட் விற்பனையில் ஈடுபட்டிருந்த இளைஞர்கள் தமிழ்க் கடையில் ஒரு தமிழ்க் குடும்பத்துக்கு தமது தொலைக்காட்சி பற்றி விளக்கம் அளிக்க முயன்றனர். அந்த குடும்பம் பெரிய குடும்பமாக இருந்தது. பலருள்ள அக்குடும்பத்தின் தலைவியை இளைஞர்கள் அணுகி தமது தொலைக்காட்சியைப் பற்றி விளக்கினர். 'எங்கள் தொலைக் காட்சி ஒவ்வொரு தமிழர் வீட்டிலும் இருக்க வேண்டிய ஒன்று. நாங்கள் இன்ன, இன்ன நிகழ்ச்சிகளை எல்லாம் ஒளிபரப்புச் செய்கிறோம்' என்று அரம்பித்து 'இலண்டனில் தூர நோக்கோடு செயற்படும் ஒரு தொலைக்காட்சி' என முடித்து தமது காட்டை விற்க காத்திருந்தனர். இவர்களது விளக்கத்தை நிதானமாக கேட்டிருந்த குடும்பத் தலைவி 'அப்ப உங்கடை ரீவியில கிட்ட இருந்து பார்த்தால் தெரியாதோ எனக் கேட்டார்.'

# வேறொன்றும் கேட்காதீர்கள்

தமிழ் ரேடியோ ஒன்றின் உரிமையாளர் நீங்கள் எங்கள் ரேடியோவைத் தவிர வேறு எந்த ரேடியோவையும் கேட்கக் கூடாது என்று புலம்புகிறாராம். சம்பளம் இல்லாமல் கலைஞர்களிடம் வேலையைப் பெற்றுவிட்டு இந்த ரேடியோ உரிமையாளர்கள் புலம்புவது சகிக்க முடியவில்லை என இலண்டனின் மூத்த ஒளிபரப்பாளர் தெரிவிக்கிறார். நல்லவாயன் சம்பாதிக்க, நாரியவாயன் தின்ற கதையாக இருக்கின்றதே இந்த கதை. ச்சீ...ச்சீ...தூ.

# லங்காபுவத் தோத்துவிட்டது

இலங்கையில் உண்மைக்கு புறம்பான செய்திகளை வழங்குவதில் லங்காபுவத்துக்கு நிகர் லங்காபுவத்தே என்பது அனைவரும் அறிந்ததே. ஆனால் இலண்டனில் உள்ள சில செய்தி ஊடகங்கள் லங்காபுவத்தையும் மிஞ்சி விடுவதாக ஒரு செய்திப் பிரியர் தெரிவிக்கிறார். இவர்கள் செய்திகளைப் பதிவு செய்வதற்குப் பதில் கொப்பி அடிக்கிறார்களாம். நதிமூலம் ரிஷி மூலம் பார்க்க இவர்கள் தயார் இல்லையாம். ஜால்ரா இருந்தால் உடனே போடுகிறார்களாம். அப்படி போடுடா அருவாளை. தொட்டில் பழக்கம் சுடுகாடுவரையில் என்பார்கள். பள்ளிப்பருவத்தில் இருந்த காப்பயடிக்கும் பழக்கம் பெரிய உருவங்களாக வளர்ந்தால் மட்டும் மாரிவிடுமா என்ன? ச்ச...இதென்ன கண்றாவி...

## தூங்காதே தம்பி தூங்காதே

# கும்பகர்ணன்களுக்கு எச்சரிக்கை

அதிகம் தூங்குபவர்களுக்கு ஆயுள் குறைவு என கலிபோர்னிய பல்கலைக்கழக ஆய்வு தெரிவிக்கிறது. இது வரை தூக்கம் குறைவாக உள்ளவர்களே குறைந்த ஆயுளையும் உடல்நலக் குறைவையும் எதிர் நோக்குவதாக இருந்தது. ஆனால் பொது உளவியல் பதிவு சேர்க்கையில் இருந்து 30 வயது முதல் 102 வயது வரையான 1.1 மில்லியன் மக்களின் பதிவுகளை வைத்து மேற்கொள்ளப்பட்ட ஆய்விலேயே அதிக தூக்கம் ஆயுளைக் குறைக்கிறது என்பது அறியப்பட்டது. ஆனால் இதற்கான காரணம் என்ன என்பது தமக்கு தெரியாது என்கிறார் இவ்வாய்வுக்கு தலைமை தாங்கிய பேராசிரியர் கெ டானியல்.

இவ்வாய்வு ஒருவருக்கு ஆறரை மணிநேரத் தூக்கம் போதுமானது என்கிறது. எட்டு மணித்தியாலத்துக்கு அதிகமாக தூங்குபவர்களும் நான்கு மணிநேரத்துக்கு குறைவாக தூங்குபவா்களும் குறிப்பிடத்தக்க அளவில் விரைவாக மரணத்தை தழுவுவதாக அவ்வாய்வு வெளிப்படுத்தி உள்ளது. ஆறு ஆண்டுகாலப் பகுதிக்குள் 8 மணித்தியாலம் தூங்குபவர்கள் 7 மணித்தியாலம் தூங்குபவர்களைக் காட்டிலும் 12 வீதம் கூடுதலாக மரணத்தை தழுவுவதை அவ்வாய்வு சுட்டிக் காட்டுகிறது.

சொன்னா கேக்கணும் இல்லாட்டி சாகணும்.

# அடடே எய்ட்ஸ் டோய்..ஓடு..

## நியூஹாம் அதிக நோய்வாய்ப்பட்ட பகுதி

தமிழ் மக்கள் செறிந்து வாழும் கிழக்கு இலண்டன் நியூஹாம் பகுதி பிரித்தானியாவின் நோய்வாய்ப்பட்ட பகுதிகளில் ஒன்று என ஆய்வுகள் தெரிவிக்கின்றன. நாட்டின் சராசரியைக் காட்டிலும் மனநோயால் பாதிக்கப்பட்டவர்கள் மூன்று மடங்காகவும், நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் இரண்டு மடங்காகவும் காணப்படுகிறது. மேற்கு நாடுகளில் ரியுபோர்குளோசிஸிசால் பாதிக்கப்பட்டவர்கள் நியூஹாமிலேயே அதிகமாக உள்ளனர். ஊனமுற்றவர்களுக்கான (65 வயதுக்கு கீழ்ப்பட்டவர்களில்) உதவிக் கொடுப்பனவுகளை பெறுபவர்களில் கூடுதலானவர்கள் இங்கேயே வாழ்கின்றனர். மேலும் இங்கு வாழும் ஆண்களின் ஆயுட்காலம் நாட்டின் ஏனைய பாகங்களில் வாழ்பவர்களை காட்டிலும் குறைவாகவே காணப்படுகிறது. இவற்றுடன் எய்ட்ஸ் நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் அதிகமாகவும் சிசு மரணம் அதிகமாகவும் இருக்கும் பகுதியாகவும் நியூஹாம் உள்ளது.

கவனம்: நியூஹாமில் வீடு வாங்கினால் நோய்கள் இலவசம்.

AravindanS
Solicitors and Commissioners for Oaths
Sixteen years experience in conveyancing
Residential & Commercial
Tel: 020 8503 5034
Fax: 020 8471 7307
214 High Street North, East Ham, London E6 2JA

JK SHAH
Chartered Certified Accountants & Registered Auditors
e-mail: jk@jkshah.com
website: www.jkshah.com
570 Romford Road, Manor Park
London E12 5AF
TEL: 020 8553 2436
FAX: 020 8514 6939

PATEL & Co.
Accountant Tax Consultant
At your service for over 15 years
For your Personal, Shop or Company Accounts
020 84513049
C.J. House
99A Cobbold Road,
Willesden
London NW10 9SL

உதயன்
பத்திரிகை கிடைக்காதவர்கள் காப்பிக்கு 45p செலுத்தி 25-27 High Street, Edgware வந்து எவ்வளவு copy வேண்டுமானாலும் பெற்றுக் கொள்ளலாம். மேலும் தபால் முலமாக பெற விரும்புவோர் 12 Copyக்கு £10 அனுப்பி பெற்றுக் கொள்ளலாம். விவரங்களுக்கு 020 8952 5677 தொடர்பு கொள்ளவும்.

தனிச்சிறப்பு ஹோமங்கள்
கணபதி ஹோமம், சன்முக ஹோமம், ருத்ர ஹோமம், துர்கா ஹோமம்,
காயத்ரி ஹோமம், சண்டி ஹோமம், சந்தான லஷ்மி ஹோமம்
போன்ற ஹோமங்கள் மிக சிறப்பான முறையில் சாஸ்திரமுறைபடி பயின்ற
நல் அனுபவம் வாய்ந்த பண்டிதர்களினால்
காயத்ரி மாதா திருஸ்தலத்தில் மட்டும் நடத்தி கொடுக்கப்படும்.
சிறப்பான முறையில் ஹோமங்கள் செய்ய விரும்பும் பக்தர்கள் தொடர்புகளுக்கு
020 8905 7775

ஙிન્ડિયન ફ્યુનરલ સર્વિસ
INDIAN FUNERAL SERVICE
Established Since 1993
The First And only INDIAN Family owned INDEPENDENT Funeral Directors in England, Speak to us in English, Gujarati or Punjabi. All arrangements in accordance to individual religious rites, Washing and dressing facilities, Shiva Ashram of rest, Priest, Floral arrangements, Saturday and Sunday funerals arranged.
For any enquires, contact us day or night on
020 8361 6151
(24 hrs)
Chandu, Jay, Bhanubhai
Hansa or Jyoti
உங்கள் தேவையே எங்கள் சேவை
Chandu Tailor 07957 250851
Ashwin Galoria 07836 252383
Please note our NEW Harrow Branch Address
Head Office:
Chani House,
Lower Park Road,
New Southgate,
London, N11 1QD
England
020 8361 6151
லண்டனில் முழுக்க இந்தியரின் நிர்வாகத்தில் இயங்குவதால் எம்மால் உங்கள் கலாச்சாரப்படி இணைந்து செயற்பட முடியும்.
Fax 020 8368 1008
www.indianfuneral.co.uk

தீராத
உங்களின் மன
வேதனைகள்
தீர்ந்திட,
உங்களின்
வாழ்க்கையில்
என்றும் வெற்றி
கண்டிட
தரிசியுங்கள்
அன்னையை
020 8905
7775

முத்துக்கள், சுத்தமான நவரத்தினக்கற்கள்
சாத்திர விதிகளுக்கு ஏற்ப நவரத்தின
மோதிரங்கள் ஓடர்களுக்கு
செய்து கொடுக்கப்படும்.
பொன்னுருக்களுக்கு ஏற்ற
சகல ஒழுங்குகளும்
செய்து கொடுக்கப்படும்
உங்கள் எண்ணங்கள் எங்கள் கைவண்ணத்தில்



ROYAL JEWELRY
றோயல் ஜுவலரி
287, High Street North
Eastham-Manor Park
London E12 6SL
Tel: 020 8472 5500

## SOLICITORS


# WARAN & COMPANY SOLICITORS

*Commissioners of Oath*

Community Legal Service — Specialist Help Point Immigration & Nationality

*Specialists in:*

* Immigration & Nationality
* Asylum & Refugee matters
* Housing
* Conveyancing (Residential & Commercial)
* Liquor Licencing

Call **Mr. S. K. Nageswaran**
**Mrs. P. Nageswaran** on

**Tel: 020 8808 2397**

551 High Road, Tottenham, London N17 9SY **Fax: 020 8801 8818**



# MANOGARAN & CO. SOLICITORS

Administrator of Oaths

Principal:
S. MANOGARAN LL.B
Member of the Law Society
Immigration Law Panel

LEGAL AID
WORK UNDERTAKEN

* Immigration and Asylum Matters
* Nationality Matters
* Civil Litigation
* Liquor Licencing

24 HOE STREET, WALTHAMSTOW, LONDON E17 4PH
Tel:: 020 8521 5757 Fax: 020 8521 8202



# கிறான்புறுக் சட்டத்தரணிகள்

கைலாஷ் சபாபதி ஆகியோரால் அண்மையில்
தொடர்ந்து அமைக்கப்பட்ட உருவாக்கப்பட்ட சட்ட நிறுவனம்.
ஜீவா டானியல்

நாம் கீழ்க்காணும் பட்டியல் உட்பட பல சட்ட பகுதிகளிலும் சிறந்த ஆலோசனையும் உதவியும் வழங்க பயிற்சி பெற்றவர்களும் நம்பகமானவர்களும்.

* குடிவரவு (Immigration)
* வீடு/கடை கொள்வனவு விற்பனவு (Conveyancing)
* குற்ற வழக்குகள் (Criminal Litigation)
* குடும்பம் (Family)
* பொது வழக்குகள் (Civil Litigation)
* சமூக பாதுகாப்பு உதவிகள் (Social Security Benefits)
* வீட்டு வாடகை பிணக்குகள் (Landlord & Tenant)
* விபத்துக்களினால் ஏற்பட்ட காயங்களுக்கான நட்டஈடுகள் (Personal Injury Compensation)
* காவல் நிலையத்திலான சட்ட ஆலோசனையும் உதவியும் (Advice & Assistance at Police Station)

We Undertake work in certain areas of law

தொலைபேசி: 020 8553 9944
தொலைநகல்: 020 8553 9985
முகவரி: 79 Cranbrook Road,
Ilford Essex
IG1 4PG

Cranbrook solicitors



**MARKANDAY & CO** Solicitors & Commissioners For Oaths 212 kiburn high road, london NW6 4JH. TEL: 020 7624 6301 / 020 7625 43250



உங்களின்
வரி
விளம்பரங்களுக்கு
உதயன்
020
8952
5677



# RAJA & CO. SOLICITORS

Criminal Defence Service — Community Legal Service — Specialist Help Point Immigration Welfare Crime

LEGAL AID FRANCHISE

**A QUALITY SERVICE**
*Approved by The Legal Aid Board*

295 Balham High Road Tooting Bec London SW17 7BA
Tel: 020 8682 2585 Fax: 020 8682 2575
DX 34006 TOOTING NORTH



# Jeya & Co
SOLICITORS

**Commissioners of Oaths**

* **Immigration**
  **(We do legal aid)**
* **Conveyancing: Residential & Commercial**
* **Liquor Licencing**

**Principal: Malathy Jeyanantham LL.B**
**Associate: Kavina Ponnampalam LL.B**

**322, High street north, Manor park, london E12 6SA**
**DX: 4733 East Ham**
Contact us for prompt and proper services



# SRIHARANS SOLICTORS

Community Legal Service — Specialist Help Point Immigration & Nationality

**AUTHORISED TO ADMINISTER OATHS**
**PROFESSIONAL SERVICE FOR FREEDOM AND JUSTICE UNDER THE HUMAN RIGHTS ACT 2000 OF UK AND WITH EUROPEAN CONVENTION ON HUMAN RIGHTS.**

A. Sriharan
R. Sriharan
223 THE BROADWAY
SOUTHHALL, MIDDLESEX.
TEL: 020 8843 9974 (3LINES)
FAX: 020 8574 1766



# Genga & Co.
## Solicitors
Administor of Oaths

**Legal Aid Francise for Crime and Immigration**

Specialists in:
Asylum + Immigration Law
Criminal Law-
Police station
Magitrate court
Crown court

தேர்ச்சி பெற்ற சட்ட வல்லுனர்கள்:
"அகதி அந்தஸ்து குடிவரவு குடியகல்வு
குற்றவியல் வழக்குகள்"
"மஜிஸ்டுரேட் நீதிமன்றம்,
பொலிஸ்நிலையம்"

எந்தவிதமான அவசரத் தேவைக்கும்
24 மணித்தியால தொடர்பு இலக்கம்
**0956 569 559**
**Tel: 020 8795 5020**
**Fax: 020 8795 5030**

**Genga & Co.**
1st & 2nd Floor
588 High Road Wembley,
Middx. HA0 2AF
**E-Mail: Genga8co.wembley.ic24.net**



# Markandan & Co.
## Solicitors
Empowered to administer oaths
**M.Markandan LL.B.**

* **Immigration,Home Office**
* **Refugee, Asylum**
* **commercial Conveyancing**
* **Matrimonial**
* **Licensing**
* **Representation at Police Stations**
* **House,Flat Purchase or Sale Etc.**

**Legal aid**

Tel: 020 8514 8188
Fax: 020 8514 8303

**Thamil House**
**720 Romford Road, Manor Park,**
**London E12 6BT**

## மருத்துவ செய்திகள்

# தாய்மை அடைவதை தள்ளிபோடுவது மார்பு புற்று நோய்க்கு வழிவகுக்கும்

தாய்மை அடைவதை பிற்போடுவது மார்புப் புற்று நோய் ஏற்படுவதை தூண்டும் என பிரித்தானிய புற்றுநோய் சஞ்சிகை மேற்கொண்ட ஆய்வில் இருந்து தெரியவந்து உள்ளது. முப்பது வயதளவில் தமது முதலாவது குழந்தையை பெறும் பெண்களில் மாதவிடாய் சுற்று நிற்குமுன் (menopause) மார்புப் புற்று நோய் ஏற்படுவதற்கான வாய்ப்பு இளம் தாய்மார்களை (22 வயது) காட்டிலும் 63 வீதம் அதிகமாக உள்ளது என அவ்வாய்வு கூறுகிறது. ஒன்பதில் ஒரு பெண் இம் மார்புப் புற்று நோயால் பாதிக்கப்படுவதாகவும் பிரித்தானியாவில் ஆண்டுக்கு 38,000 பெண்கள் இதற்கு ஆளாவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இளமையில் பருவம் அடையும் பெண்கள் இந்நோய்க்கு ஆளாகும் வாய்ப்பு அதிகமாக காணப்படுகிறது. 15 வயதில் பருவம் அடையும் பெண்களைக் காட்டிலும் 11 வயதில் பருவம் அடைபவர்கள் மார்புப் புற்று நோயால் பாதிக்கப்படும் வாய்ப்பு அதிகம் எனவும் அச்சஞ்சிகை தெரிவிக்கிறது.

# ஐரோப்பிய உடல் நல அட்டை

15 ஐரோப்பிய நாடுகளுக்கான உடல் நல அடையாள அட்டையை 2005ல் அறிமுகப்படுத்துவது பற்றி பார்சிலோனாவில் மார்ச்சில் இடம்பெறும் சந்திப்பில் ஆராயப்பட உள்ளது. கிறடிட் காட் அளவுடைய இந்த இலத்திரனியல் உடல் நல அடையாள அட்டையில் ஒருவருடைய உடல் நலம் பற்றிய முழுமையான விபரங்களுடன் பெயர், வாழும் நாடு பற்றிய தகவல்களும் பதியப்பட உள்ளது. ஐரோப்பிய ஒன்றியத்தை அறிவிக்கும் மற்றுமோர் சின்னமாக இந்த அடையாள அட்டை அமையும் என ஒன்றிய பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

ஆனால் இது பொலிஸார், சுங்க மற்றும் ஏனைய அதிகாரிகளால் அடையாள அட்டையாக பயன்படுத்தப்படலாம் என இவ்வட்டை பற்றிய சந்தேகங்கள் வெளியிடப்பட்டு உள்ளது. இவ்வட்டை பற்றி அவநம்பிக்கை உடையவர்கள் இது பின் கதவால் கொண்டுவரப்படும் அடையாள அட்டை எனத் தெரிவிக்கின்றனர்.

# தடுப்பூசி போட்டுக் கொள்வதில் குழப்பம்

குழந்தைகளுக்கு வழங்கப்படும் முக்கூட்டுத் தடுப்பூசி (Measles, Mumps & Rubella - MMR triple vaccination) பிரித்தானியாவின் குழந்தைகள் சுகாதாரத்தில் பதட்டத்தை ஏற்படுத்தி உள்ளது. Measles, Mumps & Rubella ஆகிய 3 நோய்களையும் தடுக்க வழங்கப்படும் முக்கூட்டுத் தடுப்பூசி குழந்தைகளில் ஏற்படும் மூளை வளர்ச்சிக் குறைவுக்கு காரணமாக இருப்பதாகவும் மேற்கண்ட நோய்களுக்கு தனித்தனி தடுப்பூசியை வழங்குவது நல்லது என்றும் மருத்துவ நிபுணர் ஆன்றூ வேக்பீல்ட் தெரிவித்ததை அடுத்தே இந்த குழப்பம் ஏற்பட்டது.

ஆனால் நிபுணர் வேக்பீல்டின் கருத்தை மறுப்பவர்கள் பிரதமர் ரொனி பிளேயர் உட்பட உலகெங்கும் உள்ள 90 நாடுகளில் இத்தடுப்பூசி வெற்றி அளித்துள்ளது என்றும் மேலும் மூளை வளர்ச்சிக் குறைவுக்கும் முக்கூட்டு தடுப்பூசிக்கும் உள்ள தொடர்பு விஞ்ஞானரீதியாக நிரூபிக்கப்படவில்லை என்றும் தெரிவிக்கின்றனர். தனது குழந்தை லியோவுக்கு முக்கூட்டு தடுப்பூசி வழங்கப்பட்டதா? இல்லையா? என்பது தனது குடும்பவிடயம் எனத் தெரிவித்த பிரதமர் தனக்கும் குடும்பத்துக்கும் ஆபத்து என்று கருதும் விடயத்தை மக்களை செய்யும்படி கேட்கமாட்டேன் என்று தெரிவித்தார். சிரேஸ்ட மருத்துவ அலுவலர் சேர் லியம் டொனால்ட்சன் முக்கூட்டுத் தடுப்பூசி தான் அம்மூன்று நோய்களுக்கும் ஒரே தடுப்புமுறை என்றும் அரசு அதனைவிடுத்து தனித் தனி தடுப்பூசி முறைக்கு முன்வந்தால் தான் வேலையை ராஜினாமா செய்யப் போவதாகவும் எச்சரித்து உள்ளார்.

இதற்கிடையே இச்சந்தர்ப்பத்தில் தனியார் சிகிச்சை நிலையங்கள் தனித்தனி தடுப்பூசிகளை வழங்குவதில் மும்மரமாக ஈடுபட்டு உள்ளன.

# தாயகம் சென்று டாக்டர்கள் மருத்துவ உதவி

யாழ்ப்பாணம் விஜயம் மேற்கொண்டிருந்த பிரித்தானிய மருத்துவக்குழுவினர் நாடு திரும்பினர். இவர்கள் யாழில் இருந்து புறப்படுவதற்கு முதல் நாள் இராப்போசன விருந்து வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர். யாழ்ப்பாணத்துக்கு பெப்ரவரி பிற்பகுதியில் விஜயம் செய்த பிரித்தானிய மருத்துவக் குழுவில் நான்கு தமிழ் மருத்துவ நிபுணர்களும் உள்ளடக்கப்பட்டு இருந்தனர். இம்மருத்துவக் குழுவினர் அங்கு தங்கியிருந்த 11 நாட்களில் 130ற்கும் மேற்பட்ட காயப்பட்டவர்களுக்கு பிளாஸ்ரிக் சிகிச்சையை மேற்கொண்டுள்ளனர்.

இலங்கை தனது தேவைக்கு அதிகமாக மருத்துவர்களை உருவாக்கிய போதும் நாட்டின் வடக்கு கிழக்கில் மருத்துவ துறையினரின் பற்றாக்குறை நீண்டகாலமாகவே இருந்து வருகிறது. அடிப்படை மருத்துவ சேவைகள் முதல் நிபுணத்துவ சேவைகள் வரை மனித வலுப்பற்றாக்குறை காணப்படுவது யாழ் மருத்துவமனை மருத்துவர்களாலும் யாழ் பல்கலைக்கழக மருத்துவப் பிரிவினராலும் சுட்டிக்காட்டப்பட்டு இருக்கிறது.

தொடர்ச்சியான யுத்தத்தின் போது வடக்கு கிழக்கில் இருந்த சிறுபகுதியான மருத்துவத் துறைசார்ந்தவர்கள் தமது அளப்பெரிய பங்களிப்பை தமது சமூகத்துக்கு வழங்கியமையும் பிரான்ஸ் நாட்டை தளமாக கொண்டு இயங்கும் எல்லைகளற்ற மருத்துவர்கள் அமைப்பு (MSF Medicins San s Frontiers ) யுத்த சூழலில் மருத்துவ சேவைகளை வழங்கியதும் சகல தமிழர்களாலும் நன்றியுடன் பேசப்பட்டு வருகிறது.

புலம்பெயர்ந்து வாழும் நாடுகளில் குறிப்பாக ஆங்கில மொழி பேசும் பிரித்தானியா, கனடா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து ஆகிய நாடுகளில் இலங்கையின் வடக்கு கிழக்கைத் தாயகமாகக் கொண்ட நூற்றுக்கணக்கானவர்கள் மருத்துவத் துறையில் தேர்ச்சியுடன் உள்ளனர். அவர்களது சேவை தற்போது அங்குள்ள மக்களுக்கு அவசியம் என்ற வேண்டுகோள்கள் பரவலாக

HOUSE FOR SALE IN Sri Lanka
NEGOMBO - MUNNAKARA
நீர்கொழும்பு முன்னைக்கர
Near Seaside (1 mile)
Price - 13 Lakhs (ono)
Contact: GENGA
(+44) 0208 200 1059
Mob: 07950026959

# குழந்தையின் மரணம்

## தொலைபேசி ஆலோசனை மீது குற்றச் சாட்டு

பிறந்து நான்கு வாரமே ஆன பெண் குழந்தை ஜோர்டன் நோய்வாய்ப்பட்டதும் குழந்தையின் தாயார் தேசிய சுகாதார சேவைகள் தொலைபேசி ஆலோசனை மையத்திற்கு போன் செய்து ஆலோசனை கேட்டு உள்ளார். மையத்தில் கடமையில் இருந்த மருத்துவ சேவகி குழந்தையின் நோயைத் தவறாக இனம் கண்டு அதற்கான ஆலோசனையை வழங்கிவிட்டார். தவறான ஆலோசனையினால் குழந்தை 12 மணித்தியாலங்கள் தாமதமாக மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்லப்பட்டு வைத்தியரிடம் காண்பிக்கப்பட்டது.

அங்கு குழந்தை பக்ரீரியாவினால் ஏற்படும் மெனின்கைற்றிஸ் நோயினால் பாதிக்கப்பட்டு இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. இந்நோய்க்கு உடன் சிகிச்சை பெறுவது மிக மிக அவசியம். சடுதியாக ஏற்படக் கூடிய இந்நோய் கண்டால் ஒவ்வொரு மணிநேரமும் மிக மிக முக்கியமானது. மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு 5 நாட்களின் பின் குழந்தை உயிரிழந்தது. குழந்தையின் மரணம் இயற்கையானது எனத் தெரிவித்த மரண விசாரணை அலுவலர் மருத்துவ சேவகியின் ஆலோசனை குழந்தையின் தாய்க்கு ஒரு தவறான நம்பிக்கையை ஏற்படுத்தியதாக தெரிவித்தார். தவறான ஆலோசனை வழங்குவதைக் காட்டிலும் ஆலோசனை வழங்காமல் இருப்பது நல்லது என்றும் அவர் தெரிவித்தார்.

# ஏழு வயதுச் சிறார்களுக்கும் பாலியல் கல்வி

ஏழு வயதுச் சிறார்கள் தொடக்கம் பள்ளி மாணவர்களுக்கு பாலியல் கல்வி கற்பிக்கப்பட வேண்டும் என மருத்துவ தலைவர்கள் கேட்டுக் கொண்டு உள்ளனர். பிரித்தானியாவில் பாலியல் நோய்களின் பரம்பல் அதிகரித்து வருவதை அடுத்தே அவர்கள் இக்கோரிக்கையை வைத்து உள்ளனர். பிரித்தானியா ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்குள் அதிகமான இளம் தாய்மாரைக் கொண்டிருப்பதும் குறிப்பிடத்தக்கதே 2000 ஆண்டு வரையான 5 ஆண்டுகளில் பாலியல் நோய்களால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 300,000 ஆல் அதிகரித்து உள்ளது. வேகமாக பரவிவரும் இந்த அபாயத்தை தடுப்பதற்கு சிறுவர்களுக்கு பாலியல் கல்வி அவசியம் என்றும் நாம் நினைப்பதிலும் பார்க்க சிறார்கள் இளம் பிராயத்திலேயே முதிர்ச்சி அடைவதாகவும் பாலியல் கல்வியை ஆதரிப்பவர்கள் தெரிவிக்கின்றனர்.

மிக இளம் வயதிலேயே சிறார்களுக்கு பாலியல் கல்வியை போதிப்பது அவர்களது இளமையை பறித்துவிடும் என்றும் பாலியல் பற்றிய எதிர்மாறான விளக்கங்களால் எதிர்காலத்தில் அவர்கள் பாலியல் ஆர்வத்தை இழந்துவிடுவார்கள் என்றும் சிறார்களுக்கான பாலியல் கல்வியை ஏற்றுக் கொள்ளாதவர்கள் தெரிவிக்கின்றனர். சிறார்களுக்கு எப்போது பாலியல் பற்றி தெரியப்படுத்தப்பட வேண்டும் என்பதை பெற்றோர் தான் முடிவு செய்ய வேண்டும் என இன்னொரு சாரார் தெரிவிக்கின்றனர். ஆனால் பெற்றோர்களால் அதனை செய்ய முடியாமல் உள்ளது அல்லது அவர்கள் அதனை செய்வதில்லை என பிரித்தானிய மருத்துவ அமைப்பு தெரிவிக்கிறது.

# தமிழ்ப் பெற்றோரும் பாலியல் கல்வியும்

Sex என்ற பதத்தை பயன்படுத்துவதையே அருவருப்பாக பார்க்கும் புலம்பெயர் தமிழ்ச் சமூகம் இன்று விரும்பியோ விரும்பாமலோ இந்த பாலியல் கல்வி பற்றிய அறிவைப் பெற வேண்டியவர்களாக உள்ளனர். பிரித்தானிய கல்வி முறையில் பாலியல் பற்றிய கருத்துக்கள் ஓரளவுக்கு தமிழர்களின் சிந்தனை முறையை ஒத்து இருக்கிறது. ஆனால் ஸ்கன்டிநேவிய நாடுகளான நோர்வே, டென்மார்க், பின்லாந்து ஆகிய நாடுகள் பாலியல் பற்றி வெளிப்படையான லிபிரல் போக்குடையனவாக உள்ளன. பிரித்தானியா தவிர்ந்த ஏனைய ஐரோப்பிய நாடுகளும் பாலியலில் லிபிரல் போக்கைக் கடைப்பிடிக்கின்றன. அந்நாடுகளில் வாழும் தமிழ் மாணவிகள் சுற்றுலாச் செல்லும் போது அவர்களுக்கு கருத்தடை மாத்திரைகளை கொடுத்துவிடும்படி பெற்றோர்கள் அறிவுறுத்தப்படுகின்றனர். புறச் சூழலில் உள்ள கலாச்சார மாற்றங்கள் தமிழ்ப் பெற்றோரின் பண்பாட்டு இறுக்கத்தை தளர்த்த ஆரம்பித்து விட்டது. பெற்றோர்கள் இந்த புறச் சூழல் மாற்றத்துக்கு ஏற்ப தம்மை தக்க வைத்துக் கொள்ளாவிட்டால் தங்கள் பிள்ளைகளிடம் இருந்து அந்நியப்பட்டுவிடுவார்கள் அல்லது அவர்களைப் பிரிய வேண்டி ஏற்பட்டுவிடும் என ஐயப்படுத்தப்படுகின்றது.

DISCOUNT (CONSTRUCTION) DOUBLE GLAZING LTD.

FACTORY PRICES WHY PAY MORE?
MANUFACTURERS & INSTALLERS OF:
ALUMINIUM • HARDWOOD • RESIDENTIAL DOORS
PORCHES • PATIOS • UPVC
All Work Guaranteed For 10 Yrs
All Work Carried Out By Our Own Qualified Craftsmen
Retail & Trade Welcome All Double Glazing Repair Work Undertaken
Tel: 020 8514 0819 Fax: 020 8514 2333
Showroom: 844 Romford Rd, E12

WINDOWS DOORS CONSERVATORIES
FREEPHONE 0800 018 4252
TEL/FAX: 020 8426 8898

Manufacturers and installers of PVCU & Aluminium Windows, Doors, Storm Porches & Conservatories
Stained & Bevelled Glass Specialists
cladding
URL:www.aacladding.co.uk
E-mail:sales@aacladding.co.uk
AA Cladding, 260 Northolt Road, South Harrow, Middlesex HA2 8DY

ASYLUM

(சென்ற இதழின் விடப்பட்ட செய்தி)

# தடுப்பு முகாம்களில் தமிழர்கள்

இச்செய்தி கிடைத்த போது பின்வரும் தஞ்ச விண்ணப்பதாரிகள் போஸ்ட்மோத் முகாமில் கீழ்வருவோர் தடுத்து வைக்கப்பட்டு இருந்தனர். ( ஆனால் இவர்கள் எப்போதும் வேறு இடங்களுக்கு மாற்றப்படலாம்.)

சிவசம்பு கனகநாயகம்
நாகராசன் வரதராசன்
இராசையா கமலேஸ்வரன்
தர்மலிங்கம் பரமேஸ்வரன்
சுந்தரமூர்த்தி ஜீவமனோகர்
நாகராஜா குகன்
தங்கராசா ரஞ்சன்
கந்தையா மதியழகன்
நடராஜா தர்மராஜா
கந்தசாமி தேவானந்தன்
வல்லிபுரம் சணமுகராசா
சின்னையா ஞானப்பிரகாஸ்
முருகேசு கிரிதரன்
நாகலிங்கம் பிறேம்குமார்
மோகனதாஸ்

மொதத்மாக மேற்படி முகாமில் 54 இலங்கைத் தமிழர்கள் தடுத்து வைக்கப்பட்டு இருந்தனர். ஆனால் இச்செய்தி அச்சுக்கு போகும் போது கிடைத்த தகவலின் படி அவர்கள் வேறு முகாம்களுக்கு மாற்றப்பட்டு விட்டனர். இப்படியாக பல தமிழர்கள் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்ட அனுப்பப்படுகின்றனர். ஆனால் அவ்விபரங்கள் வெளியே வருவதில்லை. மேற்படி கைது செய்து வைக்கப்பட்டவர்களும் தங்கள் சொலிசிட்டர்கள் தங்களை கைவிட்டுவிடுவார்கள் அல்லது தங்களுக்கு எதிராக ஏதாவது செய்துவிடுவார்கள் என்பதால் உதயன் நிருபர்களிடம் தங்கள் சட்டநிறுவனங்களின் பெயர்களை தர மறுத்தவிட்டனர். ஆயினும் சில நிறுவனங்களுடன் நாம் தொடர்புகொண்டு வருகிறோம் எமது அடுத்த இதழில் மேலதிக விடயங்கள் வெளிவரும்.

மேலும் கந்தசாமி தேவானந்தன் மார்ச் 8ம் திகதி நாட்டுக்கு அனுப்பப்பட்டு விட்டதாக அங்குள்ளவர்கள் தெரிவிக்கின்றனர். ஆனால் அது பற்றி குடிவரவு அதிகாரிகள் தகவல் தரமறுத்த விட்டனர்.

NATRAJ SWEET CENTRE
Curry & Rice available everyday
Natraj
The name behind the quality
Come and visit our Newly Refurbished Sweet Centre
Natraj
Where the quality starts
The Best is Pure Vegetarian Indian Cuisine for Weddings, Parties, Religious Events & Special Occasion
We have a vast selection of delicacies indian sweets & savouries to take away
PURE VEGETARIAN CATERER FOR EXCLUSIVE WEDDINGS & PARTIES
RING FOR A MENU
341 NORTHOLT ROAD, SOUTH HARROW, MIDDX. HA2 8JB
TEL: 020 8426 8903 FAX: 020 8248 2255

MAROO CASH & CARRY
205 Kenton Road, Harrow, Middx. HA3 0HD
Tel: 020 8907 3900
ALL IN KITCHEN WARE
BUY ONE GET ONE FREE
IN MANY ITEMS
VERY.VERY CHEAP PRICES
RETAILERS & WHOLESALERS OF
STAINLESS STEEL, PLASTICWARE, THERMOWARE,
AGGARBATHI AND MANY MORE ITEMS
WHY DO YOU NEED TO GO EALING ROAD
WHILE WE BEAT ANY PRICES!!!
(OFF STREET PARKING IS FREE!!!)



OPEN TO PUBLIC
WHOLESALE PRICE DIRECT TO PUBLIC
OPENING HOURS MON to SAT 9.00am to 7.00pm
SUN 10.00am to 5.00pm

CRIME NEWS

க்ரைம் நியூஸ்

## தமிழ் இளைஞரை அடித்து பணத்தைப் பறித்தனர்

ஈஸ்ற் ஹாம் ஹை ஸ்ரீற்றில் தமிழ் இளைஞர் ஒருவரிடம் பணம் அடித்துப் பறிக்கப்பட்டு உள்ளது. ஜனவரி பிற்பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றது. ஹை ஸ்ரீற்றில் உள்ள பார்கிளேஸ் வங்கியில் இருந்து £2000 பணத்தை எடுத்துக் கொண்டு வந்த குயில் என அழைக்கப்படுகின்ற இளைஞரே இவ்வாறு தாக்கப்பட்டதாக தெரியவருகிறது. இரு ஆசியர்களும் ஒரு கறுப்பினத்தைச் சேர்ந்த இளைஞரும் இந்த கொள்ளையில் சம்பந்தப்பட்டு உள்ளனர்.

மிகவும் சன சந்தடியான ஹை ஸ்ரீற் பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றது மிகவும் ஆச்சரியமாக இருப்பதாக அப்பகுதியில் வசிக்கும் இந்திரன் உதயனுக்கு தெரிவித்தார். ஆனால் இளைஞர்கள் கூட்டமாக காரணம் இன்றி வங்கிகளுக்கும் தபாலகங்களுக்கும் முன்னால் நிற்பது தடுக்கப்பட்டால் இப்படியான வழிப்பறிகளைத் தடுக்க முடியும் என பணத்தைப் பறிகொடுத்தவரின் நண்பர் ஜெகன் தெரிவித்தார். அவர் மேலும் குறிப்பிடுகையில் ஈஸ்ற் ஹாம் பகுதியில் இப்படியான சம்பவங்கள் நாளாந்த பிரச்சினையாகி வருகிறது என்றும் உள்ளாட்சி மன்றம் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

## £6000 பெறுமதியான நகைகள் துணிகர கொள்ளை

அபேவுட் பகுதியில் தமிழர் வீட்டில் £6000 இற்கும் அதிக பெறுமதியான நகைகள் களவாடப்பட்டு உள்ளது. அப்பகுதியில் நீண்ட காலம் வாழ்ந்துவரும் பொறியியலாளர் (இன்ஜினியர்) அருண்குமாரின் வீட்டிலேயே இத்துணிகரக் கொள்ளை இடம்பெற்று உள்ளது. ஜனவரி நடுப்பகுதியில் மாலை 5 மணி அளவில் உள்ளே நுழைந்த கள்வர்கள் அங்கிருந்த நகைகளை எல்லாம் சுருட்டிக் கொண்டு சென்றுள்ளனர். இக்களவுக்கு இரு தினங்களுக்கு முன்னரே வீட்டில் இருந்தவர்கள் திருமணம் ஒன்றுக்கு நகைகளை அணிந்து சென்றனர்.

இக்களவு இடம்பெற்ற போது அங்கு ஒருவர் ஆழ்ந்த நித்திரையில் இருந்து உள்ளார். சில ஆண்டுகளுக்கு முன்னர் அருண்குமாரின் சகோதரர் வீட்டில் களவு முயற்சி இடம்பெற்றது. அப்போது தூங்கிக் கொண்டு இருந்த மற்றுமோர் சகோதரர் ரவீந்திரகுமார் விழித்துக் கொண்டதால் திருடர்கள் தப்பி ஓடிவிட்டனர்.

அருண்குமார் வீட்டில் இடம்பெற்ற சம்பவத்தைத் தொடர்ந்து தனது வீட்டுக் கதவின் சகல பூட்டுக்களையும் ரவீந்திரகுமார் முன்னெச்சரிக்கையாக பூட்டியே வைக்கிறார். ஆசியர்கள் பொதுவாகவே 22 கரட் தரமான நகைகளை அணிவது அனைத்து கள்வர்களும் அறிந்த ஒன்று. அதிலும் குறிப்பாக தமிழ் பெண்களின் நகை ஆர்வம் இங்குள்ள கொள்ளையர்களுக்கு வரப்பிரசாதமாக அமைந்து உள்ளது.

பிரித்தானியாவில் மிகவும் பாதுகாப்பான முகவரியான பிரதமர் ரொனி பிளேயர் வாழும் இலக்கம் 10 டவுனிங் ஸ்ரீற்றில் £100,000 களவு இடம்பெறும் போது அருண்குமார் போன்ற சராசரி பிரஜைகளின் வீடுகளின் பாதுகாப்பு கேள்விக் குறியாகிறது.

## டோல் மோசடிகளுக்கு அதிரடிப் பிரச்சாரம்

உதவிநலக் கொடுப்பனவுகளில் மோசடி செய்பவர்கள் பற்றிய தகவல்களை வழங்கும்படி அரசாங்கம் பொதுமக்களைக் கேட்டு உள்ளது. இந்த மோசடிக்காரர்களுக்கு எதிராக £16 மில்லியன் செலவில் அரசு பிரச்சாரப் போரை நடத்தி வருகிறது. உதவிக் கொடுப்பனவின் மோசடிகளுக்கு பொறுப்பான அமைச்சர் மல்கம் விக்ஸ் இந்த மோசடிகளால் அரசுக்கு ஆண்டுக்கு £2 பில்லியன் நட்டம் ஏற்படுவதாக தெரிவித்து உள்ளார்.

## களவாடப்பட்ட கைத் தொலைபேசிகள் மாட்டியது

களவாடப்பட்ட £4 மில்லியன் பெறுமதியான Samsung A300 flip-phones இல் அரைவாசியான 13,000 தொலைபேசிகள் பொலிஸாரால் மீட்கப்பட்டது. மேற்கு இலண்டன் சவுத்தோலில் காவல்துறையினர் மேற்கொண்ட தேடுதல் வேட்டையிலேயே இத்தொலைபேசிகள் சிக்கியது. ஒரு வானில் ரவர் போலின் விரிப்புக்குக் கீழ் இத்தொலை பேசிகள் மறைத்து வைக்கப்பட்டு இருந்தன. இந்தக் கொள்ளையுடன் சம்பந்தப்பட்ட ஐவர் கைது செய்யப்பட்டு உள்ளனர்.

## திருடுகளைத் தடுக்க ஒரு வழி

வீட்டில் உள்ள பெறுமதியான பொருட்களை Ultra Violet பேனையால் அடையாளப்படுத்தி வைக்கும் படி காவல்துறையினர் மக்களைக் கேட்டு உள்ளனர். பெறுமதியான பொருட்களில் அல்ற்றா வைலட் பேனையால் உங்கள் வீட்டு இலக்கத்தையும் போஸ்ட் கோட்டையும் எழுதிவிட்டால் போதுமானது. சாதாரணமாக பார்க்கையில் நீங்கள் எழுதியது உங்கள் பார்வைக்கு தெரியாது. ஆனால் விசேட ஒளிக்கதிர்களின் கீழ் பார்க்கும் போது நீங்கள் எழுதியது தெளிவாகத் தெரியும். களவாடப்பட்ட பொருட்கள் மீட்கப்படும் போது உங்கள் வீட்டு இலக்கமும் போஸ்ட் கோட்டும் இருந்தால் பொலிஸார் அதனை உங்களிடம் ஒப்படைக்க உதவியாக இருக்கும்.

## கவனம் உங்களின் கை தொலைபேசி

ஒவ்வொரு கைத்தொலைபேசிக்கும் என்று ஒரு விசேட இலக்கம் உண்டு. பற்றரியின் கீழ்ப் பகுதியில் உள்ள இந்த இலக்கத்தை குறித்து பாதுகாப்பாக வைக்கவும். இல்லாவிடில் *#06# என்பதை உங்கள் கைத்தொலைபேசியில் அழுத்தினால் அந்த இலக்கத்தை பெறலாம். கைத்தொலைபேசி களவுபோனால் காவல்துறைக்கும் அக்கைத்தொலைபேசி நிறுவனத்துக்கும் அந்த இலக்கத்தை கொடுக்கவும். அதன் மூலம் அத் தொலைபேசியை களவெடுத்தவர் அதனை பயன்படுத்துவதைத் தவிர்க்கலாம். மேலும் சில கைத்தொலைபேசி நிறுவனங்கள் களவாடப்பட்ட அத்தொலைபேசிக்கு 'I ' m stolen !' என்ற செய்தியை தொடர்ந்து அனுப்பிக் கொண்டு இருப்பார்கள்.



## திருடர்களுக்கு உதவும் மலிந்த விலையில் துப்பாக்கிகள்

இலண்டன் தெருக்களில் துப்பாக்கிகளின் விலை குறைந்து செல்வதாகவும் இது மிகவும் ஆபத்தானது என்றும் காவல்துறை ஆணையாளர் சேர் ஜோன் ஸரீவன்ஸ் பெப்ரவரி 13ம் திகதி எச்சரித்து உள்ளார். இலண்டன் தெருக்களில் குறைந்தது £200 இற்கே துப்பாக்கிகள் வாங்கக் கூடியதாக உள்ளது. ஜமேக்கா மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் இருந்து பெரும் தொகையான ஆயுதங்கள் பிரித்தானியாவுக்குள் கொண்டு வரப்படுகின்றன. காவல்துறையினர் ஆண்டுக்கு 600 துப்பாக்கிகளை கைப்பற்றிய போதும் இலண்டன் தெருக்களில் துப்பாக்கிகளின் எண்ணிக்கை அதிகரித்தே வருகிறது. இதனை பயன்னடுத்தி திருடர்கள் தங்களின் கைவரிசைகளை காட்டி வருகின்றனர்.



# அகதிகளுக்கு உதவ அகதி அமைப்புகளுக்கு லொட்ரி பணம்

அகதிகள், வயோதிபர்கள், மற்றும் சிறுபான்மை சமூகங்களுக்கு உதவுவதற்கு £6 மில்லியன் லொட்ரிப் பணம் ஒதுக்கப்பட்டு உள்ளது. தலைநகரில் உள்ள 56 அமைப்புகள் இதனால் பயனடைய உள்ளன.

சல்ஸ்பறி ஆரம்பப் பாடசாலையில் ஒழுங்கமைக்கப்பட்டு நடத்தப்படும் Refugees Learning Development Project திட்டத்துக்கு 3 ஆண்டுகளுக்கு £ 183,638 சமூக நிதியில் இருந்து வழங்கப்பட்டு உள்ளது. 100இற்கும் உட்பட்ட அகதிக் குழந்தைகளுக்கும் அவர்களது பெற்றோருக்கும் கல்வி, சமூக, உளவியல் ஆதரவை வழங்குவதே இத்திட்டத்தின் நோக்கமாக உள்ளது. இத்திட்டத்தின் கீழ் விண்ணப்பப் படிவங்களைப் பூர்த்தி செய்வதில் உதவுவது, மாணவர்கள் பள்ளியில் தொடர்ந்தும் உள்ளனர் என்பதை உறுதிப்படுத்துவது, மொழிப் பயிற்சிகளை வழங்குவது போன்ற பல செயற்பாடுகளைச் செய்வதாக இத்திட்டத்தின் முகாமையாளர் நினா சோஹ்டா தெரிவிக்கிறார். இத்தகைய உயர்ந்த வாய்ப்பை நமது பழம் பெருச்சாலிகள் பயன்படுத்திக்கொள்ளக் கூடும்.

# தமிழ் மணப் பதிவாளர்கள் அவசியம்

தமிழ் மக்கள் அதிகம் வாழும் பகுதிகளான ஈஸ்ற்ஹாம், ரூற்றிங், சவுத்தோல் போன்ற இடங்களில் தமிழ் மணப் பதிவாளர்கள் அவசியம் என உதயனுக்கு வந்த வாசகர் கடிதங்கள் தெரிவிக்கின்றன. தமிழ்த் திருமணங்களைப் பொறுத்தவரை அண்மையில் நாட்டுக்கு வந்த மணமகனோ மணமகளோ பதிவாளர் முன்னிலையில் எடுக்கும் மண உறவுப் பிரமாணத்தை ஆங்கிலத்தில் எடுக்கும் போது சிலசமயம் அதன் அர்த்தம் புரியாமலும் வார்த்தைகளை உச்சரிக்க முடியாமலும் திண்டாடுவது நம்மில் பலர் கண்ட உண்மை. சில சமயம் உங்களுக்கே ஏற்பட்டிருக்கக் கூடும். இதனை தவிர்க்க தமிழர்கள் அதிகம் வாழும் பகுதிகளில் தமிழ் மணப் பதிவாளர்கள் அமர்த்தப்பட்டு தமிழிலேயே மணப்பதிவை மேற்கொள்வது பலருக்கு சௌகரியமாக அமையும். இது தொடர்பாக நாம் மக்களிடம் பேசியதில் தமிழ் அமைப்புகள் இது தொடர்பாக தமது மாநகராட்சி அமைப்புகளை வற்புறுத்த வேண்டும் என அவர்கள் எமக்கு தெரிவித்தனர்.

குறிப்பாக இன்று பிரித்தானிய அரசியலில் ஈடுபட்டுள்ள அல்லது ஈடுபடவுள்ள அரசியல்வாதிகள் இதுபற்றி கவனத்தில் எடுக்க வேண்டும். றெட்பிறிஜ் மாநகராட்சி தொகுதியில் நிற்கும் தவத்துரை (நிரஞ்சன்), நியுஹாம் நகராட்சி கவுன்சிலர் போல் சத்தியநேசன், மேலும் கடந்த தேர்தலில் வட இலண்டனில் கொன்சவேடிவ் வேட்பாளராக நின்ற கருப்பையா செல்வராஜா, கிறீன் கட்சியில் சதேக் பகுதியில் நிற்கும் முன்னாள் மேயர் சின்னமணி மற்றும் ஜெகதேவன் போன்ற தமிழர்களை பிரதிநிதித்துவம் செய்யும் அரசியல் ஆர்வலர்கள் இதுவிடயத்தில் கவனம் செலுத்த வேண்டும் என உதயன் வாசகர்கள் கேட்டுக் கொள்கின்றனர்.

A4ALL APPLIANCES
SALES, SERVICE AND PARTS
Fridge Freezers, Vacuum Cleaners, Washing Machines, Washer Dryer, Tumble Dryers, Dish Washers, Cookers & Microwaves, Hoover Bags
*Supplier of New, Graded & Reconditioned*
Tel: 020 8908 6171 Mob: 07985 565675
33 Court Parade, East Lane, Wembley HA0 3HS.

Panesar Electrical Co.
*EST 1981*
மலிவு விற்பனை
12V LV Lamps 20W/35W/50W *Buy 10 for £10.00 and get 2 free!*
12W Split Load Consumer Unit RCD + Main Switch 8 MCBs *Only £85.95*
Mains Spotlight C/W 3x 50w Lamps *Only £23.95!* Chrome, Brass or White
Xpelair DX100T 4" Timer Fan C/W Wall + Window Kit *Only £22.95! While Stocks Last!*
OFFERS ONLY AVAILABLE WITH THIS ADVERT
ALL PRICES INCLUDE VAT - OFFER ENDS 28/4/02
364 High Street North, Manor Park, London E12 6PH
Tel: (020) 8472 1873, Fax: (020) 8471 6271

ADVERTISE FOR BEST RESULTS 020 8952 5677
The UDHAYAN உதயன்

Air conditioning specialists
KS BUILDING SERVICES ENGINEERING LTD
- Free design & free survey
- Air conditioning and Refrigration systems
- Ventilation
- Eletrical installation & control system
- Portable air conditioning for sale

Website: www.kssiva.com
Email: sales@kssiva.com
FULLY QUALIFIED ENGINEERS
FOR A PROFESSIONAL SERVICE CALL 020 8200 8962
FAX: 020 8200 8918 MOBILE: 07799 142 759
237A Edgware Road, Colindale London NW9 6LU

# GCSE கல்வி முறையை முடிவுக்கு கொண்டுவர முயற்சி

தற்போதுள்ள GCSE கல்வி முறையை முடிவுக்கு கொண்டுவர கல்வி அமைச்சு தீர்மானித்து உள்ளது. ஆனால் உடனடியாக அப்படி எந்தத் திட்டமும் இல்லை என கல்விச் செயலாளர் எஸ்ரலா மொறிஸ் தெரிவித்து இருக்கிறார். ஆனால் GCSE பரீட்சை முறையில் ஏற்படுத்தப்படும் மாற்றம் GCSE கல்வி முறையை முடிவுக்கு கொண்டுவரும் என நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

திறமை வாய்ந்த மாணவர்கள் GCSE பரீட்சையை எடுக்காமலேயே AS தர பரீட்சைக்கு தோற்ற அனுமதிக்கப்பட கல்வி அமைச்சு நடவடிக்கை எடுக்க முனைந்து உள்ளது. இதனால் GCSE பரீட்சை பெறுபேறுகள் தரம் குறைந்தவையாக கணிக்கப்படும் என்றும் இது அப்பரீட்சை எடுக்கும் மாணவர்களுக்கு இழைக்கப்படும் அநீதி என்றும் நிழல் கல்விச் செயலாளர் குற்றம்சாட்டி உள்ளார்.

தற்போது நடைமுறையில் உள்ள GCSE கல்வி முறையை தொழில் வாய்ப்புக்கு ஏற்ற கல்வி முறையாக மாற்றி மாணவர்களை தொடர்ந்தும் பள்ளிகளில் இருக்கச் செய்வதே தற்போதைய மாற்றத்துக்கான காரணம் என கல்விச் செயலாளர் எஸ்ரலா மொறிஸ் தெரிவிக்கிறார். தற்போது 25 வீதமான மாணவர்கள் 16 வயதிலேயே பள்ளியை விட்டு வெளியேறிவிடுகின்றனர்.

# கடைக்குள் புகுந்த பெணின் அட்டகாசம்

வடக்கு இலண்டன் ஹென்டனில் உள்ள பட்ஜன்ஸில் பொருட்களை வாங்க வந்த பெண் அங்கு அட்டகாசம் செய்ததில் அக்கடைக்கு £2,500 நட்டம் ஏற்பட்டு உள்ளது. ஜூஸ்டன் என்ற தமிழ் இளைஞரின் முகாமைத்துவத்தில் இருக்கும் பட்ஜன்ஸின் ஹென்டன் கிளையிலே மார்ச் முதலாம் திகதி இச்சம்பவம் இடம்பெற்றது. சம்பவதினம் கடமையில் இருந்தவர்கள் மாலை பொருட்களை கொள்வனவு செய்ய வந்த வெள்ளையினப் பெண்ணின் மீது சந்தேகம் கொண்டு அப்பெண்ணை உள்ளே வைத்து கடையை அடைத்துள்ளனர். அதனை அடுத்து அப்பெண் அருகில் இருந்த வைன் போத்தல்களை தள்ளி வீழ்த்தி உடைத்துள்ளார். உடைக்கப்பட்ட சேதமடைந்த பொருட்களின் பெறுமதி £2,500 ஆக மதிப்பிடப்பட்டது.

கடமையில் இருந்த ஈஸ்ற்ஹாமை சேர்ந்த இரு தமிழ் யுவதிகளும் ஒரு வாலிபரும் நடப்பதை திகைப்புடன் பார்த்து விட்டு பொலிஸாருக்கு அறிவித்தனர். ஸ்தலத்தக்கு விரைந்த பொலிஸார் அப்பெண்ணை கைது செய்து ஆதாரமாக சம்பவத்தை பதிவு செய்த ஒளிநாடா[illegible] கொண்டு சென்றதாகவும் அங்கு பணிபுரியும் வி பாலசுப்ரமணியம் உதயனுக்கு தகவல் தந்தார். 24 மணி நேரமும் திறக்கப்படும் இக்கிளை சம்பவத்தை அடுத்து மறுநாள் காலை வரை மூடப்பட்டு இருந்தது. கடந்த ஜனவரி 25ல் பட்ஜன்ஸின் இதே கிளையில் ஒரு தமிழ் இளைஞர் தாக்கப்பட்டு இருந்தார்.

# சட்டவிரோதமாக வேலை செய்யும் நூற்றுக் கணக்கான தமிழர்கள்

பிரித்தானியத் தமிழர்களில் இந்தக் கருப்புப் பொருளாதாரத்தில் ஈடுபட்டிருப்பவர்கள் இலங்கை இனப்பிரச்சனையை காரணம் காட்டி வந்த ஏனைய நாட்டவர்களும் ஏனைய ஐரோப்பிய நாடுகளில் தஞ்சம் மறுக்கப்பட்டு வந்தவர்களுமே என அகதிகள் அமைப்புடன் நெருங்கி பணியாற்றும் தென்கிழக்கு இலண்டனைச் சேர்ந்த தவநேசன் உதயனுக்கு தெரிவிக்கிறார்.

குறிப்பாக தமிழ்நாட்டில் இருந்தும் கேரளா மற்றும் மலேசியாவில் இருந்தும் தாங்கள் இலங்கையர் எனக் கூறிக்கொண்டு பலர் பிரித்தானியாவில் களவாக வேலை செய்வது பலரும் அறிந்த விடயமே. இவர்கள் உண்மையில் இலங்கையில் பாதிக்கப்பட்டு வரும் ஈழத் தமிழர்களின் தஞ்ச விண்ணப்பத்தின் நன்மதிப்பை பாதிப்பதாக அகதிகள் அமைப்பில் பணியாற்றும் சிவலிங்கம் உதயனுக்கு தெரிவித்தார். அவர் மேலும் குறிப்பிடுகையில் இந்த பொய்[illegible] விண்ணப்பங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் சட்டநிறுவனங்கள் பொறுப்புடன் செயற்பட முன்வர வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

# சீக்கியர்களும் இலங்கையர்களும் வாக்குவாதம் சமாதானம் செய்ய முற்பட்டவர் கொலை

சவுத்தோலில் உள்ள Lahori Village உணவகத்தில் 20 சீக்கியர்கள் கத்திகள் இரும்புத் தடிகள் போன்ற ஆயுதங்களுடன் புகுந்து காடைத்தனம் புரிந்துள்ளார்கள். இவர்கள் மிருகத்தனமாக தாக்கியதில் உணவகத்தின் உரிமையாளர் ஹுசைன் சாயிட் (41) க்கு பலத்த காயம் ஏற்பட்டது. அவர் காயங்களினால் மருத்துவ மனையில் உயிரிழந்தார். அவருடைய மருமகன் ஒருவரும் பலத்த தாக்குதலுக்கு உள்ளாகி உயிருக்கு போராடினார். இச்சம்பவம் ஜனவரி முற்பகுதியில் இடம்பெற்றது. இச்சம்பவத்துக்கு இரு வாரங்களுக்கு முன்னரும் இந்த சீக்கிய குழுவினர் மிரட்டல் செய்ததாகவும் பொலிஸார் இது பற்றி எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும் கொல்லப்பட்டவரின் மருமகன்களில் ஒருவர் தெரிவித்தார். அச்சம்பவம் பற்றித் தெரியவருவதாவது இந்திய சீக்கியர்களுக்கும் இலங்கையர்களுக்கும் வாக்குவாதம் ஏற்பட்டு அது பின்னர் இருவருக்கிடையே தெருச்சண்டையாக மாறியது. இதனைச் சமாதானப்படுத்த பாகிஸ்தானியரான ஹுசைன் சென்ற போது ஏதோ காரணத்தால் சீக்கியர்கள் ஹுசைன் மீது கோபம் அடைந்தனர். அவர்கள் 'தற்போது இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் போர் தொடங்கிவிட்டது நாங்கள் உன்னைத் தேடி பின்னர் வருவோம் என்று சொல்லிவிட்டுச் சென்றுள்ளனர்' என ஸாகி சாயிட் (19) கொல்லப்பட்டவரின் மற்றொரு மருமகன் ஈவினிங் ஸ்ரான்டட் பத்திரிகைக்கு தெரிவித்து இருக்கிறார்.

ஹுசைனின் கொலைச் சம்பவத்துக்குச் சில தினங்களுக்குப் பின்னர் ஜனவரி 7ம் திகதி அவ்வுணவகத்தின் கண்ணாடிகள் நொருக்கப்பட்டு உள்ளது. இது தொடர்பாக யாரும் கைது செய்யப்படவில்லை. ஆனால் கொலை தொடர்பாக 7 ஆசிய இனத்தவர்கள் கைது செய்யப்பட்டு விசாரணையின் பின் விடுவிக்கப்பட்டனர்.

## உங்களுக்கு வதிவிட உரிமை கிடைக்கவில்லையா! நீங்களும் கைது செய்யப்படலாம் !!!

# உங்கள் சொலிசிட்டரை உடன் நடவடிக்கை எடுக்க சொல்லுங்கள்

4,000க்கு மேற்பட்ட தமிழரின் தஞ்ச விண்ணப்பங்கள் தஞ்ச விண்ணப்பதாரியினதும் அவர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் சட்டநிறுவனங்களினதும் பொறுப்பின்மையால் நிராகரிக்கப்பட்டதாக உள்துறை அசைச்சின் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. 1992 முதல் 1998 வரை 565 அகதிகள் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டு உள்ளனர். அதன் பின்னர் அனுப்பப்பட்டவர்களின் விபரங்களை உள்துறை அமைச்சு அறிவிக்கவில்லை. ஆனால் அண்மைக் காலங்களில் 50க்கும் மேற்பட்டவர்கள் தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டு உள்ளனர். 10க்கும் மேற்பட்டவர்கள் நாட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டு உள்ளனர்.

தஞ்ச விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டவர்களை திருப்பி அனுப்பும் நடவடிக்கைகளில் பிரித்தானிய அரசு முழுமூச்சாக ஈடுபட்டு வருகிறது. இப்படியான திருப்பி அனுப்பப்பட வேண்டிய நாட்டவர்களில் இலங்கைத் தமிழர்களும் அடக்கப்பட்டு உள்ளதாக அகதிகள் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. மார்ச் நடுப்பகுதியில் பிரித்தானிய தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டவர்களுடன் உதயன் நிருபர்கள் தொடர்பு கொண்ட போது அவர்களது இந்நிலைக்கு காரணம் இங்கு அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சட்ட நிறுவனங்களின் பொறுப்பற்ற தன்மையே என அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதனை அகதிகள் அமைப்புகளும் ஊர்ஜிதப்படுத்துகின்றன. 90 வீதமான தமிழ் சட்ட அமைப்புகள் முற்றிலும் பொருளாதார நோக்கில் செயற்படுவதாகவும் ஒரு வழக்கை எடுத்தால் அதனை வெல்ல வேண்டும் என்பதற்கு எந்த முயற்சியும் செய்யாமல் தஞ்ச விண்ணப்பதாரியிடம் இருந்து எவ்வளவு பணத்தை எடுக்க முடியுமோ அவ்வளவை எடுப்பதிலேயே குறியாக இருப்பதாகவும் அகதிகள் அமைப்புடன் கடந்த 10 ஆண்டுகளாக செயற்பட்டு வருபவர் உதயனுக்கு தெரிவித்தார். ஒருவர் தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டால் தடுத்து வைக்கப்பட்டவரின் வழக்கு மற்றும் சட்டப்பதிவுகள் முறையாக செய்யப்பட்டு இருந்தால் அவர்களை அகதி அமைப்புகளுக்கூடாக பிணையில் வெளியே கொண்டுவர முடியும். ஆனால் துரதிஸ்ட வசமாக பெரும்பாலான சட்டநிறுவனங்களுக்கு தாங்கள் பிரதிநிதித்துவப்படுத்தம் விண்ணப்பதாரியின் வழக்குப் பற்றி அக்கறை இருப்பதாக தெரியவில்லை என அவர் மேலும் தெரிவித்தார்.

போஸ்ட் மோத்தில் உள்ள Home Office Holding Centre, கடவிக் ரின்சிலி ஹவுஸ், வெஸ்ட் றைட்ரனில் உள்ள ஹர்மன்ட்வேர்த் ஆகிய தடுப்பு மையங்களிலேயே பெரும்பாலான அகதிகள் தடுத்து வைக்கப்பட்டு உள்ளனர். குறூப் போர் எனும் பாதுகாப்பு நிறுவனத்தினால் கண்காணிக்கப்படும் இம்முகாம்களில் தாங்கள் கடுமையாக நடத்தப்படுவதாக அவ்விளைஞர்கள் தெரிவிக்கின்றனர். தடுத்து வைக்கப்பட்டவர்களில் 10க்கும் மேற்பட்டவர்கள் 50 வயதுக்களில் உள்ளவர்கள் என்றும் தெரியவருகிறது. குறூப் போர் அதிகாரிகளின் கடும் போக்குப் பற்றி மனித உரிமை அமைப்புகள் கண்டனம் தெரிவித்திருந்தன. மேலும் யார்ழ்வூட் தடுப்பு மையத்தில் ஏற்பட்ட தீ விபத்தும் குறூப் போரின் கடுப்போக்கால் ஏற்பட்ட கலகத்தின் விளைவு என்ற செய்தியும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# தமிழ் கடைக்காரரின் கண் தப்பியது

சட்வல் ஹீத்தில் மதுபானக் கடை வைத்திருந்த ஜெ தங்கவேல் அதிஸ்டவசமாக தனது பார்வையை இழக்காமல் தப்பித்துக் கொண்டார். சட்வல் ஹீத் ஸ்ரேசன் வீதியில் தனது மதுபானக் கடையை நடத்தி வந்த தங்கவேல் ஜனவரி பிற்பகுதியில் இரவு தனது கடையை மூடுவதற்குத் தயாராகிக் கொண்டு இருந்த வேளையிலேயே இந்த தாக்குதல் சம்பவம் நடந்தது.

வழமைபோல் கடையை மூடுவதற்குத் தயாராகிக் கொண்டிருக்கையில் இரு இளைஞர்கள் கடைக்கு வந்ததாக தங்கவேல் தெரிவித்தார். அவர்களில் ஒருவர் சிகரட் வாங்கி அதற்கு பணம் செலுத்த மற்றையவர் போத்தல் ஒன்றை எடுத்துக் கொண்டு பணம் செலுத்தாமல் வெளியேறியதாகவும் அவர்களை தான் துரத்திச் சென்றதாகவும் தங்கவேல் மேலும் தெரிவித்தார். அப்படி கலைத்துக் கொண்டு செல்கையில் ஒருவர் போத்தலால் தலையில் அடித்து உள்ளார். மற்றையவர் போத்தலால் தங்கவேலின் இடது கண்ணில் அடித்திருக்கிறார்.

இச்சம்பவத்தை அடுத்து தங்கவேலின் இடது கண்ணின் பார்வை பாதிக்கப்பட்டது. அடுத்த மாதம் கண்ணில் ஒரு சத்திர சிகிச்சை செய்யும் அளவுக்கு தங்கவேல் தள்ளப்பட்டு உள்ளார். இப்படியான வேறும் சம்பவங்கள் சட்வல் ஹீத் பகுதியில் கமராக்கள் பூட்டப்பட வேண்டிய அவசியத்தை உணர்த்தி உள்ளது. அப்பகுதி உள்ளாட்சி மன்றம் அடுத்த மாதத்தில் கமராக்களை பூட்ட உள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக இரு இளைஞர்கள் பொலிஸாரினால் விசாரிக்கப்பட்டு வருகின்றனர். உள்துறை அமைச்சர் வீதிக் குற்றங்கள், களவுகள் அதிகரித்து வருவதைக் கட்டுப்படுத்தப் போவதாக கூறியுள்ள வேளையிலேயே இச்சம்பவம் இடம்பெற்று இருக்கிறது. பிரித்தானிய சிறைச்சாலைகள் நிரம்பி உள்ள நிலையிலும் வீதிகளில் குற்றங்கள் அதிகரித்த வண்ணமே இருக்கிறது. சிறைச்சாலையின் இடப்பற்றாக்குறையை கட்டுப்படுத்த உள்துறை அமைச்சு பகுதி நேர அல்லது வார இறுதிநாள் சிறைத் தண்டனைகளை அறிமுகப்படுத்துவது பற்றி ஆராய்கிறது.


ஜெ தங்கவேல்

# அவுஸ்திரேலியாவில் இருந்து திருப்பி அனுப்பப்பட்ட தமிழர்கள் கொழும்பில் கைது

அவுஸ்திரேலியாவுக்குள் சட்ட விரோதமாக நுழைந்ததாக கைது செய்யப்பட்டு பின்னர் தடுத்துவைக்கப்பட்டு இருந்த 39 தமிழர்கள் விசேட விமானத்தில் பெப்ரவரி 13ல் திருப்பி அனுப்பப்பட்டனர். இவர்கள் கொழும்பு விமானநிலையத்தில் வந்து இறங்கியதும் இலங்கை குற்றப் புலனாய்வுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். இவர்கள் மீதான விசாரணை தொடர்வதாகவும் அவர்களை விடுவிக்க உறவினர்கள் விடா முயற்சியில் ஈடுபட்டு உள்ளதாகவும் கொழும்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

அவுஸ்திரேலியாவில் ஆட்சியில் உள்ள வலதுசாரிக் கட்சி பிரதமர் ஜோன் ஹவாட் தஞ்சம் கோருவோர் விடயத்தில் மிகவும் கடுமையாக நடந்து கொண்டு வருகின்றார் என்பது 400 கப்பல் அகதிகளை நடுக்கடலில் பல நாட்கள் தடுத்து வைத்ததன் மூலம் நிருபணமாகியது தெரிந்ததே. மேலும் அகதிகள் மனதை மாற்றும் வகையில் அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற துயர சம்பவங்களையும் அகதிகள் அங்கு அனுபவிக்க வேண்டிய கடினமான அனுபவங்களையும் விடியோ படங்களாக பதிவு செய்து அகதிகளுக்கு [illegible]

# தமிழ் வீடியோக் கடைகள் மீது அதிகாரிகள் ஒரே பாய்ச்சல்

இலண்டனில் மிகவும் இலாபகரமாக இயங்கிவரும் வீடியோக் கடைகளுக்கு எச்சரிக்கை சமிஞ்சை காட்டப்பட்டு உள்ளது. வோல்தம்ஸ்ரோ [illegible]ோ ஸ்ரீற்றில் உள்ள ரதி, பிறின்டன் வீடியோக் கடைகள் உள்ளாட்சி அதிகாரிகளின் பாய்ச்சலுக்கு உள்ளானது. ஜனவரி இறுதிப் பகுதியில் நடத்தப்பட்ட இத்திடீர் சோதனையில் பிரித்தானிய அனுமதி பெறாத வீடியோக்கள் (நாடகங்கள், படங்கள்) பிரதி செய்யப்பட்ட படங்கள் ஆகியன கண்டு பிடிக்கப்பட்டது. முதற் தடவையாக சம்பந்தப்பட்ட கடைகள் சிக்கியதால் அவர்கள் எச்சரிக்கை செய்யப்பட்டனர். ஆனால் மற்றொரு தடவை அவர்கள் பிடிபட்டால் £2,000 - £20,000 வரை அபராதம் விதிக்கப்படுவதுடன் 2 முதல் 4 ஆண்டுகள் சிறைத் தண்டனைக்கும் ஆளாவார்கள் என அதிகாரிகள் எச்சரித்ததாக உதயனுக்குத் தெரிவிக்கப்பட்டது.

தமிழ் மக்களின் ஒரு பொழுது போக்கு அம்சமாக தமிழ்ப் படங்களும் நாடகங்களும் இருந்து வருவது யாவரும் அறிந்ததே. இதனால் தமிழர் வாழும் பகுதிகளில்

4ம் பத்தியில் பார்க்க

## 4ம் பத்தி

தமிழ் பலசரக்கு கடைகளுடன் இந்த வீடியோ வியாபாரமும் வளர்ச்சி அடைந்தது. இது மிகவும் இலாபகரமாக அமைந்ததாலும் முதலுக்கு ஆபத்து இல்லாததாலும் இவ்வீடியோ வாடகைக்கு விடும் வியாபாரம் தனிக் கடைகளாக உருவானது. தமிழ்ப் படங்கள் திரையிடப்பட்ட போதும் அனைவருக்கும் நேரத்தை ஒதுக்கி நேரம் கெட்ட நேரங்களில் திரை அரங்கிற்கு செல்ல முடிவதில்லை. அதனால் வீடியோக் கடைகள் பெரிதாக பாதிப்படையவில்லை.

ஆனால் கடந்த 10 ஆண்டுகளில் மிக வேகமாகப் பெருகிவரும் தமிழர்கள் மத்தியில் தற்போது ஒன்றுக்கு நான்கு தொலைக் காட்சிகள் உருவாகிவிட்டது. வீட்டுக்கே அவர்கள் விரும்பும் படங்களும் நாடகங்களும் மற்றும் நிகழ்ச்சிகளும் ஒரு பட்டனை அழுத்தியதும் வந்து விடுகிறது. இதனால் வீடியோக் கடைகளின் வர்த்தக வீழ்ச்சி எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் தற்போது தொலைக்காட்சிகளுக்கும் பட வெளியீட்டாளர்களுக்கும் வீடியோக் கடைகளுக்கும் இடையே மறைமுகமான ஒரு வியாபாரப் போட்டி நிலவுகிறது. தொலைக் காட்சிகளும் பட வெளியீட்டாளர்களும் பெரும் தொகைப் பணத்தை முதலிட்டு நிகழ்ச்சிகளையும் படங்களையும் இறக்குமதி செய்கிறார்கள். ஆனால் வீடியோக் கடைகள் பெரும்பாலும் கள்ளக் கொப்பிகளை மிகக் குறைந்த செலவில் தருவித்து அதிக இலாபம் சம்பாதிப்பதாக தொலைக்காட்சிகளும் வெளியீட்டாளர்களும் குமுறி வருகின்றனர். இந்தக் குமுறலின் வெளிப்பாடு தான் அதிகாரிகளின் பாய்ச்சல் என தமிழ் தொலைக் காட்சிகளில் பணி செய்பவர்கள் மூலம் செய்திகள் கசிகிறது. இதுவே காரணம் என பாதிக்கப்பட்ட வீடியோக் கடைக்காரர்களும் நம்புவதாக அவர்களது நண்பர்கள் உதயனுக்குத் தெரிவித்தனர்.

பாய்ச்சலுக்கு உள்ளான ரதி மற்றும் பிறின்டென் வீடியோக் கடைகள் பிரித்தானிய அனுமதி வழங்கப்பட்ட மூலப் பிரதிகளை மட்டும் வாடகைக்கு வழங்கப் போவதாக தமது வாடிக்கையாளர்களுக்கு தெரியப்படுத்தி உள்ளன. இச்சம்பவத்தை தொடர்ந்து பிறின்டென் தனது வாடகைக் கட்டணத்தை £1ல் இருந்து £1.50 ஆக உயர்த்தி உள்ளது. ரதி வீடியோவினர் வேறு வியாபாரத்தில் ஈடுபட்டு இருந்தாலும் தாங்கள் முதன் முதல் ஆரம்பித்த வியாபாரத்தை கைவிட விரும்பவில்லை என அதன் முகாமையாளர் பிலிப்ஸ் உதயனுக்கு தெரிவித்தார்.

அதிகாரிகளின் இந்தப் பாய்ச்சல் இலண்டன் முழுவதும் பரவலாக்கப்பட்டு இருப்பதாக உதயனுக்கு கிடைத்த தகவல்கள் தெரிவிக்கிறது. அதே சமயம் சில வீடியோக் கடைகள் படங்கள், நாடகங்களை கடைக்கு வெளியே வீடுகளில் இருந்து விநியோகிக்க ஆரம்பித்து இருப்பதாகவும் தெரியவருகிறது. அண்மைய சம்பவங்களும் தொலைக் காட்சிகளின் வளர்ச்சியும் வீடியோ வியாபாரத்தில் கை வைத்து விட்டது என்பது உண்மை.

GUILD OF MASTER CRAFTSMEN
BURGES
FREE QUOTES
BURGES WINDOWS & BUILDERS
BURGES PROPERTY SERVICES
One Week in FLORIDA, USA
For Booking whole house
Contact us for a price to suit your budget!
117 BURGES ROAD• EAST HAM• LONDON E6 2BL
Tel: 020 8471 8760 Contact: Jasbir S. Mann
Tel: 020 8470 5061 Mob: 07831 858 140
Consumer Protection Association

FRANCO MAINTENANCE
We Supply and Maintain
AIR CONDITIONING
FRIDGES, DAIRY UNITS
ALL KINDS OF ELECTRICAL WORK
SHOP FITTINGS
CCTV CAMERAS
FOR A FRIENDLY AND EFFICIENT SERVICE CALL SUREN OR GERADE
FOR HOT LINE
07989 176 348 / 07870 646 392
TEL: 020 8286 9031 FAX: 020 8337 5787
ALL WORK GURANTEED NO CALL OUT CHARGES FREE ESTIMATION

**DHIMAN ENTERPRISES**
IMPORTERS, EXPORTERS & WHOLESALE DISTRIBUTORS
TEL: 020 8571 7444 • FAX: 020 8571 7477
UNIT 5, TRIANGLE CENTRE, 399 UXBRIDGE ROAD, SOUTHALL, MIDDLESEX, UB1 3EJ.

**RISING SUN**
**TELECOM & MUSIC CENTRE**
Mobile Phones Services & Repairs

* Tamil, Malayalam, Telugu Films for Sale or Rental
* For Audio, Video, CD, DVD, VCD & Magazines
* Fax Services Available
* நகை ஒடுக்கு செய்து கொடுக்கப்படும்
* மிகக்குறைந்த விலையில் நேரடித் தொலைபேசித் தொடர்புகள்

Sri Lanka - 20p India - 29p
Pakistan - 34p Europe - 10p

Mob: 07951953951
Tel: 020 8903 4568
7 - 8, Meen Bazar
105, Ealing Road,
Wembley, Middx. HA0 4BP

**The International Wood Floor Centre**
Finest Flooring Best Prices Guaranteed
* Laminate Click On
* Engineered Board
* Solid Wood
* Herring Bone

Professional Fitting Service Available
Free Estimates, Site Surveyor & Free Delivery
Open 7 Days
Tel: 020 8951 4395 - 4495
Fax: 020 951 4251
21 North Parade,
Mollison Way, Edgware HA8 5QH

**Transglobe TRAVELS**
Worldwide Travel Services
CMB - £ 440 + Tax
MAA - £ 400 + Tax
Tel: 020 8451 3566
Fax: 020 8451 7730
e-mail: INFO@FLYRUS.COM
WEB: WWW.FLYRUS.COM
328 High Road Willesden London NW10 2EN
We make your journey safe & more affordable

**No.1 Hindu Directory**
For your Advt. please contact
020 895677
Hindu Directory


ADVERTISE FOR BEST RESULTS
The UDHAYAN உதயன்
020 8952 5677

இறையருள் அரசி அன்னை காயத்ரி



வேதனைகள் தீர்க்க வல்லவர், குறைகளை போக்கிட வல்லவர்
இறையருள் அரசி அன்னை காயத்ரி.
உங்களின் வாழ்கையில் ஏற்படும் துன்பங்கள் மாறிடவும் தடைகள் யாவும் விலகிடவும் காணுங்கள் அன்னையின் தரிசனம், விலகாத நோய் விலகும், தீராத பினி அகலும், மாறாத வேதனைகள் யாவும் நீங்கும், உங்களின் பிரச்சனைகள் எதுவாயினும் தடைநீங்கி வழி பெற்றிட தொடர்பு கொள்ளுங்கள் **020 8952 7775**

**Star Tours Ltd**
The only Asian tour operator to provide pure vegetarian lunch & dinner in European tours



**DUBAI**
SHOPPING FESTIVAL SPECIAL
ADULT £499 + TAX
CHILD £399 + TAX

**Price includes:**
- Return flight from Heathrow to Dubai
- Six nights accommodation in 4* Star hotel with buffet breakfast and Indian dinner
- Desert safari with dinner
- Dubai, Sarjah & Ajman city tour
- Free transfers to Jumeirah beach
- Visit the famous Gold bazar, Spice market and many Shopping centers

For more information contact STAR TOURS now.
TEL: 020 8427 2224
E-MAIL: startour4@aol.com
STAR TOURS LTD
15A BROADWALK, PINNER ROAD
NORTH HARROW, HA2 6ED

CALL US NOW FOR OUR NEW 2002 BROCHURE OF THE EUROPEAN COACH TOURS
ALSO CONTACT FOR CHEAPEST QUOTE ON WORLDWIDE FLIGHTS

BODY WARMERS • HIKING BOOTS
**HARTEX**
Established 1969
**THE GREAT OUTDOORS**

PULLOVERS
COOKWARE
TENTS
RUCKSACKS
HAMMOCKS
HEADWEAR
MAPS
GAITERS
SHORTS
SOCKS
THERMAL UNDERWEAR
GROUND SHEETS



Competitive Prices

COMBAT CLOTHING
RAINWEAR
BOOTS
GLOVES
BELTS
WATER BOTTLES
BODY WARMERS
WEBBING
HIKING SOCKS
FOAM MATS
AIR BEDS

TENTS • SLEEPING BAGS • AIR BEDS • MAP CASES
RAINWEAR • CUTLERY SETS AND PLATES • WATER BOTTLES
COMPRESSOR BAGS • MONEY BELTS

55 Victoria Road
Ruislip Manor
Middlesex HA4 9BS
TEL: 01895 634244

321 Northolt Road
South Harrow
Middlesex HA2 8JA
TEL: 020 8864 3333

OPEN 7 DAYS